இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி

மற்றும்

பயிற்சி நிறுவனம்

வருடாந்த அறிக்கை

2023

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
"ருவன் செவன"
இல : 23/5/ஏ,
வெலிவிட்ட
2024.02.27

கௌரவ அமைச்சர்
கைத்தொழில் அமைச்சு
தபால் பெட்டு எண் 570,
73/1
காலி வீதி,
கொழும்பு - 03

கௌவர அமைச்சரவர்கட்கு,

வருடாந்த அறிக்கை 2023

1971 இன் இலக்கம் (2) 14 38 உப பிரிவின் பிரகாரம், கீழுள்ள ஆவணங்களை தங்களுக்கு முன் வைக்கின்றேன்.

1. 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பான இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிர்வாக அறிக்கைகள்
2. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான செயலாற்றுகை அறிக்கை

இவ்வண்ணம் உண்மையுள்ள,

ஏ. எம். ரத்னாயக்க
தலைவர்
இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

தூர நோக்கு, செயற்பணி

மற்றும்

நோக்கங்கள்

தூர நோக்கு

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் வளர்ச்சிக்கும், மேம்படுத்துகைக்குமென தொடர்புடைய ஆராய்ச்சிகளையும், பயிற்றுவிப்புகளையும் முன்னெடுத்த வண்ணம் மிகச் திறந்த ஆராய்ச்சிகளையும், பயிற்சிகளையும் முன்னெடுக்கின்ற நிலையமாகக் செயற்படுதல்.

செயற்பணி

“இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் போட்டித் தன்மையுடைய திறனை மேம்படுத்துவதன் மூலம் எமது சேவை பெறுநர்களுக்கு அதி கூடிய சேவையை வழங்கும் பொருட்டு தொடர்புடைய புதிய இரத்தினக் கல் படிமங்களை அடையாளும் காணும் பொருட்டு ஆராய்ச்சி செயன் முறைகள், இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் தொழிலின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய புதிய நிர்மாணிப்புகளை உறுவாக்கி அவற்றினது பெறுமதியை அதிகரிக்கும் செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பத் திறனின் ஊடாக வலுவூட்டு திறன் மிக்க ஊழியர்களை உறுவாக்கி, தொழிலுடன் தொடர்புடைய செயலமர்வுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி மடல்களை வெளியிடுதல் எமது குறிக்கோளாகும்."

நோக்கங்கள்

"இலங்கையிலுள்ள இரத்தினக் கல் கனிய வள மூலாதாரங்களை ஆராய்ந்து பேண்தகு வகையில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றூம் புதிய தொழில்நுட்ப செயன் முறைகள் தொடர்பாக பயிற்சி பெற்ற ஊழியர்களின் வாயிலாக தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பை வழங்குதல்"

2.1. பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்

2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் கட்டமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

01	திரு ஏ. எம். ரத்னாயக்க	தலைவர் இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்	பணிப்பாளர் சபையின் தலைவர் 2022.06.27 ஆம் திகதியிலிருந்து இது வரை
02	திரு கே. என். பீ. ஜயரத்ன	பணிப்பாளர் (பதில் கடமையாற்றும்) தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி அமைச்சு	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2022.04.01 ஆம் திகதியிலிருந்து இது வரை
03	திரு எஸ். ஜீ. எல். பிரனாந்து	-	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2022.12.08 ஆம் திகதியிலிருந்து இது வரை
04	திரு ரவி ராஜசிங்க சஞ்சீபன்	தலைவர் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2023.01.11 ஆம் திகதியிலிருந்து 2023.11.15 ஆம் திகதி வரை
05	திரு சஞ் ஜே பெரேரா	தலைவர் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2023.12.15 ஆம் திகதியிலிருந்து இது வரை
06	திரு ஜனக உதயகுமார	பணிப்பாளர் நாயகம் தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2023.12.28 ஆம் திகதியிலிருந்து இது வரை
07	திரு எஸ். ஏ. டப். கே. ஜயசேகர	பணிப்பாளர் (திட்டமிடல்) பதில் கடமையாற்றும் கைத்தொழில் அமைச்சு	பணிப்பாளர் சபையின் அவதானிப்பு (அமைச்சின் பிரதிநிதி) 2022.01.31 இலிருந்து இது வரை

உயர் முகாமைத்துவம்

திரு.ஏ.எம்.ரத்னாயக்க

தலைவர்

(இருந்து 27.06.2022 to date)

திரு.வி.ஜி.ஆர்.டப்ல்யூ.வசந்த கம்லாத்

பொது இயக்குனர்(Acting)

(இருந்து 23.11.2021 to date)
MSC (Gem),B.Sc (SP) (Physics) FGA,

திரு.வி.ஜி.ஆர்.டப்ல்யூ.வசந்த கம்லாத்

இயக்குனர்
(பயிற்சி மற்றும் பாடதிட்ட மேம்பாடு)

MSC (Gem),B.Sc (SP) (Physics) FGA,
MGA (SL),MBA(Reading)

திரு.ஆர்.எம்.என்.பி.கே.நலின் ஜயசிங்க

இயக்குனர்(ஆராய்ச்சி) / Acting

M.Phil(Gem.),M.Sc(GIS & RS),B.Sc.
(Geology),MIGSL,MGSSL,MGASL

திரு.எஸ்.எல்.ஜே.முகந்திரம்

உதவி இயக்குனர் (நிதி)

MPAcc(USJP),B.com (SP)Accountancy 2nd
lower Hons (USJP),CBA(ICASL),ADV.Cer
(Procurment)(ICTAD

திருமதி.டபள்யூ.எல்.பிரசங்கிகா சுரேந்திர

உதவி இயக்குனர்
(நிர்வாகம் மற்றும் மனிதவளம்) / Acting

B.Sc. Chemistry (Special)(USJP)
B.des,Jew(Sp)(UOM)

3. கலந்தாலோசிப்பு ஆண்டு காலப் பகுதியிலிருந்த படியான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் தொடர்பான தலைவரது மதிப்பீடு

3.1 சந்தர்ப்பங்கள்

❖ **ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தொடர்பான கோரிக்கை**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளின் அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு தொடர்பாக பாராளுமன்றத்தின் சட்டத்தின் கீழ் நிலை நாட்டப்பட்ட இந் நிறுவனம், தற்சமயம் இரச்சினக் கல் சுரங்க அகழ்வுச் செயற்பாட்டிலிருந்து, சர்வதேச சந்தை வரையான தங்காபரண உற்பத்தி வரையான பெறுமதி அதிகரிப்பு செயற்பாடு உள்ளடங்கக் கூடிய வகையாக புதிய உற்பத்திகளுக்குத் தேவையான திறன்கள் மற்றும் அறிவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. நிறுவனத்தினால் இன்றளவில் கிட்டத்தட்ட 21 பயிற்சிப் பாட நெறிகள், டிப்ளோமா மட்டம் வரையும் பல்வேறு துறைகள் உள்ளடங்கக் கூடிய வகையாக 15 நிலையங்களின் ஊடாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனம் நிலை நாட்டப்பட்டு மூன்று தசாப்த காலப் பகுதியில் இந் நிறுவனத்துக்குச் சவாலாக அமையக் கூடிய ரீதியான மாற்று அரச அல்லது தனியார்ப் பயிற்சி நிறுவனங்கள் தோற்றம் பெறாதிருப்பதுடன், நிறுவனத்துக்குச் சவாலாக அமையக் கூடிய வகையான பயிற்சி நிறுவனங்கள் தோற்றம் பெறக் கூடிய திறனும் சந்தையினுள் காணப்படுவதில்லையென அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மேலும் இந் நாட்டினதும், சர்வதேச இரத்தினக் கல் சந்தையினுள்ளும் ஏனைய நாடுகளுடன் போட்டியிடக் கூடிய அறிவுத் திறனை வியாபிக்கச் செய்யக் கூடிய நிபுணத்துவம் நிறுவனம் வசம் காணப்படுவதனை அடையாளம் காணலாம்.

❖ **தொழில்நுட்ப வசதிகள்**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை தொடர்பாக உயர் தொழில்நுட்பத் திறன் கொண்ட பயிற்சி பெற்ற தொழில் முனைவர்களை உறுவாக்கும் பொருட்டும், சுற்றாடல் நேயமிக்க இரத்தினக் கல் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் பொருட்டும் இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையுடன் தொடர்புடைய புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தக் கூடிய திறன் கொண்ட பரந்துபட்ட உபகரணங்கள் மற்றும் கணினி மென்பொருட்கள் நிறுவனம் வசம் காணப்படுகின்றது. அவ்வாறே, இவ் இயந்திரோபகரணங்களை இயங்கச் செய்யக் கூடிய திறனும், அறிவுத் திறனுமுள்ள பரந்து பட்ட பயிற்சி பெற்ற மானிட வளங்களும் நிறுவனம் வசம் காணப்படுகின்றது. சர்வதேசத் தராதர நிலைகளையுடைய பயிற்சிப் பாட நெறிகள் தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய பரந்து பட்ட வசதிகளை உள்ளடக்கிய இரத்தினக் கல்லியல், இரத்தினக் கல் வெட்டுகைப் பயிற்சி அலகுகள், கணினி சார்ந்த தங்காபரண அலங்கார நகை உறுவமைப்புப் பயிற்சி நிகழ்ச்சிகள் உட்பட முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பம், மெருகூட்டுகை மற்றும் இலத்திரனியல் உலோகப் பூச்சிடுகை தொழில்நுட்ப வசதிகள் போன்ற வசதிகள் நிறுவனம் வசம் காணப்படுகின்றன. அவ்வாவாறே, இரத்தினக் கல் துறை சார்ந்ததாக X-Ray Florescence Spectrometer, Magnetic Separator, specific gravity scale, Laser Diffraction Particle size analyser, Fourier - Transform Infrared Spectroscope,

Raman Spectroscope, Ultraviolet-Visible Spectroscope போன்ற நவீன இயந்திரோபகரணங்களும் நிறுவனம் வசம் காணப்படுகின்றன.

- ❖ **நிறுவனத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் விருத்தி**

பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இந் நிறுவனம் நிலை நாட்டப்பட்டுள்ள பிரதானமான நோக்கங்களுக்குப் புறம்பாகப் பல அபிவிருத்திச் செயற்பாடுகளை செயற்படுத்தக் கூடிய வாய்ப்பை நிறுவனம் தன் வசம் கொண்டுள்ளது. வருடாந்தம் செயற்படுத்தப்படுகின்ற உயர்ந்த தராதர மட்டத்தின் கீழான சான்றிதழ்களை கையளிக்கும் விழாக்களை நடாத்துதல், சர்வதேச தரமுயர்ந்த ஆராய்ச்சி மா நாடுகளை நடாத்துதல், நிறுவனத்தில் ஆராய்ச்சியாளர்களது சங்கத்தை ஆரம்பித்து அதனை முன் கொண்டு செல்லுதல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளை செயற்படுத்தக் கூடிய திறன் நிறுவனம் வசம் காணப்படுகின்றது.

- ❖ **கைத்தொழிலின் விருத்தி தொடர்பாக ஒருங்கிணைந்த கூட்டிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் உள் நாட்டு பேண்தகு, சுற்றுச் சூழல் நற்புள்ள மற்றும் நன்னெறி மிக்க விஞ்ஞானவியல் விருத்தியை ஏற்படுத்தும் முகமாக நிறுவனம் தமது செயற்பாடுகளை இயன்றளவுக்கு வெளித் தரப்பு நிறுவனங்களுடன் கூட்டிணைந்து ஒருங்கிணைந்த நிகழ்ச்சியாக செயற்படுத்திய வண்ணமுள்ளது. இதன் கீழ் தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை, புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், தேசிய விஞ்ஞான மன்றம், நூதனசாலை திணைக்களம், பேராதனை, சபரகமுவா மற்றும் ஊவா வெல்லஸ்ஸ போன்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் FGA, தாய்லாந்து இரத்தினக் கல் நிறுவனம் (GTI), பாகிஸ்தான் அரசு போன்ற வெளி நாட்டு அரசுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து இந் நிகழ்ச்சிகளை நிறுவனம் கூட்டாக செயற்படுத்திய வண்ணமிருப்பதுடன், மேலும் மேம்படுத்தப்பட்ட கைத்தொழில் தொடர்பாகப் பல்வேறு வெளித் தரப்பு பங்காளிகளுடன் கூட்டிணைந்த நிகழ்ச்சிகளை செயற்படுத்தக் கூடிய திறன் நிறுவனம் வசம் காணப்படுகின்றது.

- ❖ **நிறுவனத்தின் பிரச்சார நிகழ்ச்சிகள்**

நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட்ட வண்ணம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் கீழ் தற்சமயம் பெருமளவில் பிரச்சார நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்திய வண்ணம் நிறுவனத்தின் நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதற்கு இட வசதிகள் கிடைத்துள்ளன. எனினும், இத் துறையின் போக்கின் பிரகாரம் ஒவ்வொரு வயதையுடைய வகுதிகள், பிரதேச ரீதியான வகுதிகள், ஈடுபடுகின்ற தொழில் மற்றும் கைத்தொழிலில் ஈடுபடுவோரது கல்வி மட்ட போன்றவற்றின் பிரகாரம் மேலும் பாரம்பரிய அறிவூட்டல் மற்றும் பிரச்சார நிகழ்வுகளிலும் ஈடுபட்ட வண்ணமுள்ளது.

3.2. சவால்கள்

- ❖ **தொழில்நுட்ப, உட்கட்டமைப்பு, நிதி மற்றும் பௌதீக வசதிகள் போதுமானதாகக் காணப்படாமை.**

இரத்தினக் கல் துறையுடன் தொடர்புடையதாகத் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவுத் திறன், இயந்திரோபகரணங்களது நவீன போக்கு தொடர்பான அறிவுத் திறன் ஆகிய விடயங்கள் காரணமாக இந் நாட்டில் கைத்தொழிலில் ஈடுபடுவோர் பின்னடைவு நிலைக்கு

உள்ளாவதை அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது. அவ்வாறே, சர்வதேச அறிவுத் திறனை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வகையில் அமைந்த உயர் கல்வித் தேவைகள் தொடர்பாக நிறுவனத்தின் பணிக் குழு ஈடுபடக் கூடிய சந்தர்ப்பங்கள் குறைந்த மட்டத்திலேயே நிலவுகின்றன. பயிற்சிப் பாட நெறிகள் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பாக நவீன இயந்திரோபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற உபகரணங்களைப் பயன்படுத்தும் போக்கு குறைந்த மட்டத்தில் நிலவுவதுடன், நிறுவன அபிவிருத்திச் செயற்பாட்டின் போது எதிர்ப்பார் பலன்களை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக இவ் உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாகக் காணப்படாமை தங்கு தடையாக அமையப் பெற்றுள்ளது. அவ்வாறே, நிறுவனத்துக்கென நிரந்தர கட்டிட வசதிகள் காணப்படாமையும் அபிவிருத்திப் பொறி முறையின் போது குறைப்பாடாக காணப்படுகின்றது. நிறுவனத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பாகப் பயன்படுத்தப்படுகின்ற பயிற்சி அலகுகளை சர்வதேசத் தராதர அங்கீகார நிலைகளின் கீழ் விருத்தி செய்ய வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறே, இரத்தினவியல் ஆராய்ச்சி ஆய்வு கூடங்களுக்கென நவீன இயந்திரோபகரணங்களை பெற்றுக் கோள்ள வேண்டியிருப்பதுடன், இதற்கென போதியளவில் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

- **மானிட வளங்கள் அபிவிருத்தி மந்த கதியில் பயணித்தல்**

நிறுவனத்தின் ஊழியர் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 136 ஆகக் காணப்படுவதுடன், தற்சமயம் நிறுவனத்தில் 64 எண்ணிக்கையான ஊழியர்களே பணியாற்றிய வண்ணமுள்ளனர். தற்சமயம் நிறுவனத்தின் செயற்பாடுகளை சுமூகமாகவும், தரமுயர்ந்த வகையிலும் முன்னெடுப்பதற்கு போதியளவான எண்ணிக்கையில் ஊழியர்கள் காணப்படாதிருப்பதுடன், நிறுவனத்தை இயங்கச் செய்வதில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல பதவிகள் வெற்றிடமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அவ்வாறே, கல்வி சார் நிறுவனமொன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய உயர் கல்வா கற்ற கல்வி சார் பணிக் குழுவின் தட்டுப்பாடும் காணப்படுவதுடன், கல்வி சார் பணிக் குழு தொடர்பாகப் பட்டம் பெற்ற பணிக் குழுவை இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள் தொடர்பாக இன்றளவிலும் மிகப் பெரும் வரவேற்பு காணப்பட்டாலும், மானிட வளங்கள் தட்டுப்பாடு காரணமாக நிறுவனத்தின் செயற்பாடுகளை நன்னெறி மிக்கதாக முன்னெடுப்பதில் தங்கு தடை ஏற்பட்டுள்ளது. இதனால் உள் நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாகப் பயிற்சி இட வாய்ப்புகள் தொடர்பாக பணிக் குழுவை ஈடுபடச் செய்வதன் மூலம் பதவி வெற்றிடங்கள் தொடர்பாகத் துரிதமாக பணிக் குழுவை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

- **நிறுவனத்தின் பணிகளை முன்னெடுப்பதன் சட்ட ரீதியான நடப்பு நிலை**

நிறுவனம் நிலை நாட்டப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் இன்றளவிலும் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டியிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நிறுவனச் செயற்பாடுகளை முன்னெடுக்கையில் இவ் எல்லைகளின் கீழ் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியிருந்தமையால், ஒரு சில செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய இட வசதிகள் கை நழுவியுள்ளன. அதன் பிரகாரம், சர்வதேசத் தராதர நிலைகளின் கீழ் கல்வி நிலையங்களை கண்காணிக்கும் செயன் முறையைத் தயாரிக்க வேண்டியுள்ளது. அவ்வாறே, கைத்தொழிலில் ஈடுபடுவோருக்குத் தரமுயர்ந்த கல்வி நிலைகளை கையளிக்க வேண்டியுள்ளது. மேலும்,

கைத்தொழிலின் பேண்தகு அபிவிருத்தியை சுவீகரிக்கும் பொருட்டும் சுற்றுச் சூழல் நற்புள்ள கைத்தொழில் தொடர்பாகவும், கைத்தொழிலில் ஈடுபடுவோரது தொழிற் சார் தன்மையை கண்ணியமிக்கதாக தொகுதிக்கு ஏற்றாற் போல் இத் துறை சார்ந்ததாக முன்னெடுக்கும் பொருட்டு இக் கைத்தொழிலுடன் தொடர்புடைய சட்ட ரீதியான பின்னணியைத் தயாரிக்க வேண்டியிருப்பதுடன், அதற்கான கண்காணிப்பு செயன் முறையையும் தயாரிக்க வெண்டியுள்ளது.

- **பூரணமடையாதுள்ள தேவைகள்**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் உயர் கல்வியுடன் கூடிய நிபுணர்களைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பாக மேலும் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. அவ்வாறே, கைத்தொழிலுக்கும், சந்தை வாய்ப்புகளுக்கும் தரமுயர்ந்த உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் பொருட்டும், சுற்றாடல் நேயமிக்க அகழ்வுச் செயன் முறைகள் மற்றும் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் பொருட்டும் தேவையான நவீன தொழில்நுட்பத்துடன் கூட்டிணைந்ததாக நிறுவனத்தை வலுவுட்டும் செயற்பாடு மந்த கதியில் முன்னெடுக்கப்பட்ட வன்ணமிருப்பதுடன், அதனை பேண்தகு வகையாகவும், சீராகவும் விருத்தி செய்ய வேண்டிய நிலையில் நிலவுகின்றது.

4. பணிப்பாளர் சபை அறிக்கை

4.1 நோக்கங்கள்

1993 இன் இலக்கம் 50 ஐ உடைய தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை பாராளுமன்ற சட்டத்தின் 25 (1) ஆவது பிரிவின் பிரகாரம், 1995 ஜூலை 28 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 882 ஐ உடைய வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நிலை நாட்டப்பட்டது. நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாக ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி வசதிகளின் ஊடாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை சீர்ப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகள் காணப்படுகின்றன.

4.2 நிறுவனத்தின் அதிகாரங்கள்

இலங்கையில் இரத்தினக் கல் கனியங்கள் மற்றும் அந் நிதியங்கள் தொடர்பாக ஆராய்தல் மற்றும் அதனுடன் கூட்டிணைந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தி அவற்றை செயற்படுத்துதல்.

4.2.1 இலங்கையில் இரத்தினக் கல் கனியங்கள் தொடர்பாக ஆராய்தல்

(அ) இடவமைப்பு
(ஆ) அடையாளம் காணுதல்
(இ) இரத்தினக் கல் பாகுபாட்டு செயன் முறை
(ஈ) பிற தொடர்புடைய துறைகள் மற்றும் இரத்தினவியல் ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்

4.2.2 சுரங்க அகழ்வு, இரத்தினக் கல் மெருகூட்டல், தங்காபரண உற்பத்தி, இரத்தினக் கல் எரிவூட்டல் தொடர்பான செயன் முறைகள் மற்றும் தங்காபரண உறுவாக்கம் போன்ற துறை சார்ந்ததாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை விருத்தி செய்யும் பொருட்டு இயந்திரோபகரணங்களை உறுவாக்கக் கூடிய நுட்பங்களையும், ஏனைய ஆலோசனைகளையும் வழங்குதல்.

4.2.3
(அ) இரத்தினக் கல் வெட்டுகை
(ஆ) தங்காபரண உற்பத்தி
(இ) வைரம் உள்ளடங்கிய இரத்தினவியல்

(ஈ) தங்காபரண அலங்கரிப்புகளைத் தயாரித்தல்
(உ) இரத்தினக் கல் பாகுபாடு
(ஊ) இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் பிற பிரிவுகள் தொடர்பாகப் பயிற்றுவித்தல்

4.2.4 பணிப் பட்டறைகள், மா நாடுகள் போன்றவற்றை நடாத்துதல் மற்றும் தொடர்புடைய மென் பொருட்கள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட பணிகள் தொடர்பாக ஆவணங்கள் மற்றும்ன் புத்தகங்களை வெளியிடுதல்.

4.2.5 நிறுவனத்தின் பணிகள் சீராக முன்னெடுக்கப்படுவதை ஒழுங்கு செய்வதற்குத் தேவையான பிற விடயங்களை முன்னெடுத்தல்.

பயிற்சி பிரிவு

5. பயிற்சிப் பிரிவு

தொழிற் சார் கல்வி, நாட்டின் உற்பத்தித் துறையின் விருத்திக்கும், அத்தகைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெருமளவில் பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது. சாதாரண தரத்துக்கும், உயர் தரத்துக்கும் பிற்பாடு இந் நாட்டிலுள்ள பெருமளவானோரது எதிர்கால சுபீட்சத்தைக் கட்டியெழுப்புவதில் தொழிற் சார் கல்வி பெறும் பங்கை வகிக்கின்றது. கடந்த காலப் பகுதியில் இந் நாட்டில் இரத்தினக் கல் மற்றூம் தங்காபரணத் துறை தொடர்பாக ஈடுபடுவோரது எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன், அதன் பிரகாரம் பெருமளவில் இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த தொழிற் பயிற்சி மற்றும் கல்வியை பெற்றுக் கொள்வதற்குப் பெருமளவில் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் காட்டிய வண்ணமுள்ளனர். பயிற்சிப் பிரிவுக்கு இப் பாரிய கேள்வியை வெற்றிகரமாக நிறைவேற்றக் கூடிய திறன் காணப்பட்டதுடன், அதன் ஊடான கைத்தொழிலின் விருத்தி தொடர்பாக பணியாற்றக் கூடிய தொழில் முனைவர்களை தோற்றுவிப்பதற்கு நிறுவனத்தின் தொழிற் சார் கல்விப் பாட நெறிகளின் வாயிலாகத் திறன் கிடைத்துள்ளது.

இத் தொழிற் சார் கல்விச் செயன் முறையின் ஊடாக சர்வதேசத்துடன் போட்டியிடக் கூடிய திறன் உள்ளடங்கிய நிபுணத்துவமுள்ள தொழில் முனைவர்களை இத் துறை சார்ந்ததாக உறுவாக்கும் பொருட்டு பயிற்சிப் பிரிவினால் இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை பயிற்சி நிகழ்ச்சிகள் பெருமளவில் பங்களிப்பை வழங்கியுள்ளன. அதன் பிரகாரம், நிறுவனத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்த வண்ணம் இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் விருத்தியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை விபரமாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.1. பயிற்சிப் பாட நெறிகளை உறுவமைத்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்

பயிற்சிப் பிரிவினால் பயிற்சிப் பாட நெறிகள் சான்றிதழ் மட்டத்திலிருந்து டிப்ளோமா மட்டம் வரை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. இவற்றை செயற்படுத்துகையில் பிரதான செயற் பணிகளாக விடயப் பரப்பு மேம்படுத்துகை, பயிற்சியாளர்களை இணைத்துக் கொள்ளுதல், பயிற்றுவித்தல், பரீட்சைகளை நடாத்துதல், பயிற்சிப் பாட நெறிகளுக்கு அனுப்புதல் போன்ற செயற்பாடுகள் 15 நிலையங்களின் ஊடாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் சார் கல்வி ஆணைக் குழுவின் (TVEC) தராதர நிலைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கு இசைவாக குறித்த பிரிவினால் பயிற்சிகளும், கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் கீழ் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் உட்பட ஏனைய பிரதேச ரீதியான நிலையங்களின் ஊடாகத் தரமுயர்ந்த பாட நெறிகள் நடாத்தப்படுகின்றன.

நிறுவனத்தினால் குறிப்பாக மூன்று வகுதிகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

I. கட்டண அறவீட்டுடன் செயற்படுத்தப்படுகின்ற பாட நெறிகள்
II. குறைந்த வருமானம் ஈட்டுவோரை இலக்கிட்டு இலவசமாக செயற்படுத்தப்படுகின்ற பாட நெறிகள்
III. பதின் மூன்று வருட கால தொடர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பாட நெறிகள்

இவ் வருடத்தில் பூரண நேர மற்றும் பகுதி நேர அடிப்படையில் கிட்டத்தட்ட 150 பாட நெறிகள் நாடளாவிய ரீதியாக நிலை நாட்டப்பட்டுள்ள 15 நிலையங்களின் ஊடாக செயற்படுத்தப்பட்ட வண்ணம், 1577 மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இவ் எண்ணிக்கை முந்திய ஆண்டுக்கு சார்பாக 57% ஆன விருத்தி நிலையாகக் காணப்படுகின்றது. இது தவிர, திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தொழில் முனைவு நிகழ்ச்சிகளின் செயற்படுத்துகையின் ஊடாகவும் புதிதாகப் பயிற்றுவிக்கப்பட்டு கைத்தொழிலுள்ள அறிமுகப்படுத்தக் கூடிய திறனை 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கிடைத்திருப்பதுடன், 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் பயிற்சிப் பாட நெறிகளை கற்றுத் தேர்ந்தோரின் எண்ணிக்கை 1092 ஆகக் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை செயற்படுத்தப்பட்டுள்ள பாட நெறிகளின் கீழ் மேலும் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை 665 ஆகக் காணப்படுகின்றது.

5.1.1. 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பயிற்சிப் பாட நெறிகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் இணைப்பு

	பயிற்சிப் பாட நெறி	2022 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை	2023 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை
01	முதல் நிலை இரத்தினவியல்	147	229
02	இரத்தினவியல்	148	240
03	இரு முக இரத்தினவியல்	22	22
04	இரத்தினக் கல் நிறப் பாகுபாடு மற்றும் விற்பனை	24	23
05	கெவுட வெப்பமயமாக்கல் மெருகூட்டுகை	102	212
06	இரத்தினக் கற்கலின் அலங்கார வெட்டுகை	07	-
07	இரத்தினக் கல் வெட்டுகை மற்றும் மெருகூட்டல் NVQ 3 / NVQ 4	235	429
08	இரத்தினக் கல் வெட்டுகை மற்றும் மெருகூட்டல் - 10 நாட்கள்	8	18
09	இரத்தினக் கற்கலின் விலைகளை மதிப்பிடுதல் மற்றும் விற்பனை	-	36
10	தங்காபரண அலங்கார உறுவமைப்பு	69	80
11	கணினி சார்ந்த தங்காபரண அலங்கார வடிவமைப்பு	17	57
12	தங்காபரண உற்பத்தி NVQ 4	25	138
13	அலங்கார ஆபரண உற்பத்தி	15	-
14	ஆபரணங்களுக்கு கற்கலிடுதல்	30	38
15	மெருகூட்டல் மற்றும் இலத்திரனியல் உலோகப் பூச்சிடுகை	-	10
16	இரத்தினவியல் டிப்ளோமா	13	23
17	தங்காபரண டிப்ளோமா	-	13
18	குறுகிய காலப் பாட நெறிகள்	07	09
	முழு மொத்தம்	**869**	**1577**

5.1.2. கடந்த ஐந்து வருட காலப் பகுதிக்குரிய மாணவர் சேர்க்கை எண்ணிக்கையின் விருத்தி



ஆண்டு	மாணவர்களை இணைத்துக் கொள்வதன் விருத்தி
2019	**1165**
2020	**465**
2021	**286**
2022	**869**
2023	**1577**

5.1.3. பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களின் எண்ணிக்கையின் விருத்தி



	2022	2023
பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை	558	1092

5.1.4. வருமானமீட்டல் விருத்தி

இவ் வருடத்தில் பயிற்சிப் பாட நெறிகளை செயற்படுத்தியதன் ஊடாக நிறுவனம் இது வரை ஈட்டிய அதி கூடிய வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பு கிடைத்திருப்பதுடன், அது ரூபா 30.4 மில்லியனாகக் காணப்பட்டது. இது தவிர, பயிற்சிப் பிரிவினால் அச்சிடப்பட்ட பாட நெறி உதவிக் கிரந்தங்களின் விற்பனையின் ஊடாக வருமானத்தை ஈட்டுவதற்கு இவ் வருட கால கட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விற்பனைப் பிரிவினால் அச்சிடப்பட்ட பாட நெறிக் கிரந்தங்கள்
இரத்தினவியல்
கெவுட வெப்பமயமாக்கல் மெருகூட்டுகை
இரத்தினக் கல் வெட்டுதல் மற்றும் நிறந்தீட்டுதல்
தங்காபரண உற்பத்தி







ஆண்டு	வருமானம் ரூபா. மில்லியன்
2019	13.17
2020	12.82
2021	3.74
2022	16.3
2023	30.4

5.1.5. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த விசேட தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல்

- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வளப் பங்களிப்புடன் கூடியதாக இரத்தினபுரி பிரதேச பயிற்சி நிலையத்தில் நிறுவனத்தில் இரண்டு ***தொழில் முனைவு அபிவிருத்தி வழிகாட்டல் பணிப் பட்டறைகளை*** நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இதன் வாயிலாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவர்களை தோற்றுவிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டது.

- இலங்கை கூட்டுறவு சபையின் உத்தியோகத்தர்களுக்கென ***தங்கத்தின் அளவை தீர்மானிக்கும் மற்றும் தங்காபரண மதிப்பீடு*** தொடர்பான சீரான தொழில்நுட்பக் கோட்பாடுகள் மற்றும் நடைமுறை அறிவை கையளிக்கும் பொருட்டு ஒரு நாள் பயிற்சிப் பணிப் பட்டறையை நடாத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டு கால கட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்கென தொடர்புடைய துறை சார் 30 உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

5.2. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் சம கால தேவைகளுக்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளையும், பாட நெறிகளையும் திட்டமிடுதல்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை செயற்படுத்துகையில் ஒவ்வொரு பிரிவுகளினாலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படுகின்ற பயணப் போக்கை கருத்திலெடுத்த வண்ணம் பயிற்சிப் பாட நெறிகள் திட்டமிடப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், அடையாளம் காணப்பட்ட காலத்துக்கேற்ற தேவைகளின் பிரகாரம், 2023 கல்வி ஆண்டினுள் ஒவ்வொரு பிரிவுகளினாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும், பாட நெறிகளின் விடயப் பரப்பு முன் மொழிவுகளை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5.2.1. இரத்தினக் கல் சுரங்க அகழ்வு தொழில்நுட்ப செயன் முறைப் பயிற்சி பாட நெறிகளைத் திட்டமிடுதல்

இலங்கையின் சுரங்கத் துறை இன்று வரை பாரம்பரிய அறிவுத் திறன் மற்றும் சீரற்ற கல்வியின் ஊடான செயற்பாடுகளின் வழியே முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. இதனால், இந் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற சுரங்க அகழ்வு தொடர்பாக சீரான கோட்பாட்டு செயன் முறைகள் மற்றும் விஞ்ஞான ரீதியான அறிவுத் திறனுள்ள தொழில் முனைவர்களை கைத்தொழிலுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு இப் பாட நெறிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இப் பாட நெறிகளை 2024 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டு செல்வதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

5.2.2. இரத்தினக் கல் மதிப்பீடு மற்றும் விற்பனைப் பாட நெறி

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் விசேடித்த விடயப் பரப்புகளாக இரத்தினக் கல் தர மதிப்பீடு மற்றும் விற்பனை எனும் விடயப் பரப்பு சார்ந்த துறைகள் காணப்படுகின்றன. சர்வதேச சந்தையை இலக்கிட்ட வண்ணம் சீரான அறிவுத் திறனுள்ள இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் ஈடுபடக் கூடியோரை தோற்றுவிக்கும் பொருட்டு இப் பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப் பாட நெறிகளைத் திட்டமிட்டு விடயப் பரப்புகளை விருத்தி செய்த வண்ணம் 2023 ஆம் ஆண்டில் இப் பாட நெறிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5.2.3. தங்காபரண அலங்கரிப்பு உறுவமைப்புப் பாட நெறிகள் தொடர்பாக தேசிய தொழிற் சார் தகைமையை (NVQ 4) பெற்றுக் கொள்ளுதல்

எமது நிறுவனத்தினால் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் சார் கல்வி ஆணைக் குழுவுடன் கூட்டாக முன்னெடுக்கப்பட்ட சந்தை நிலைப்பாடுகளைக் கருத்திலெடுத்த வண்ணம் முதல் முறையாக இவ் விடயப் பரப்பை தொழில் தோற்றுவாயுடன் கூட்டிணைந்த துறையாக பரிமாற்றம் செய்யும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், தங்காபரண அலங்கரிப்பு உறுவமைப்புப் பாட நெறிகள் தொடர்பாகத் தேசிய தொழிற் சார் நிபுணத்துவ NVQ 4 மட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட மட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5.2.4. இரத்தினவியல் பாட நெறிகள் தொடர்பாக தேசிய தொழிற் சார் தகைமைகளை (NVQ 4) பெற்றுக் கொள்ளுதல்.

இரத்தினவியல் விடயப் பரப்பு தொடர்பாகவும் தேசிய தொழிற் சார் தகைமை மட்டம் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், எமது நிறுவனம் மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் சார் கல்வி ஆணைக் குழு மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் பயிற்றுவிப்பு அதிகார சபையின் கூட்டிணைப்புடன் இரத்தினவியல் விடயப் பரப்பு தொடர்பாகவும் தேசிய தொழிற் சார் தகைமை NVQ 4 மட்டத்தை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. இன்றளவில், அதன் இறுதிக் கட்டம் பயிலுநர் மற்றும் பயிற்றுவிப்பு அதிகார சபையின் கீழ் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படுகின்றது. இப் பாட நெறியும் NVQ 4 தகைமையுடன் கூடியதாக 2025 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து செயற்படுத்தக் கூடிய திறன் காணப்படுகின்றது.

5.2.5. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையுடன் தொடர்புடைய பட்டப் படிப்பு தகைமையைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

உள் நாட்டு மற்றும் சர்வதேச இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த உற்பத்திகளை சந்தைக்கு முன் வைக்கும் பொருட்டு தரமுயர்ந்த உற்பத்தித் திறனுள்ள தொழில் முனைவர்கள் அறிமுகப்படுத்தும் பொருட்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த பட்டதாரிகளைத் தோற்றுவிக்கும் பொருட்டு தேவையான சீரான செயன் முறையொன்றை தயாரிக்கும் பொருட்டு தேவையான முதல் நிலை செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு இவ் வருட கால கட்டத்தில் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போது அடையாளம் காணப்பட்ட வண்ணம் ஆரம்பத்தில் கைத்தொழில் சார்ந்ததாக டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கும், அதன் பிற்பாடு பட்டப் படிப்புத் தகைமையை கையளிக்கக் கூடிய வண்ணமும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. 2025 / 2026 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ் இலக்கை எய்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நிறுவனம் இலக்கிட்டுள்ளது.

5.2.6. தேசிய தொழிற் சார் பரீட்சை மற்றும் தேசிய தொழிற் சார் தகைமை கையளிப்பு வசதிகளை வழங்குதல்

தொழிற் சார் பரீட்சைகளை முன்னெடுத்து தொடர்புடைய நிபுணத்துவமுள்ள வல்லுநர்கள் தொடர்பாக துறை சார் நிபுணத்துவ சான்றிதழ்களை வெளியிடும் நிகழ்வுகள் இதன் கீழ் முன்னெடுக்கப்படும். சீரற்ற பயிற்சிகளைப் பெற்றுள்ள மற்றும் தற்சமயம் பணியாற்றுகின்ற நிபுணத்துவமுள்ள தொழில் முனைவர்கள் ஏற்கப்பட்ட தொழிற் சார் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதன் ஊடாக மிகச் சிறந்த உள் நாட்டு மற்றும் வெளி நாட்டுத் தொழில் வாய்ப்புகளில் ஈடுபடக் கூடிய வாய்ப்பை இச் செயன் முறையின் ஊடாக கையளிக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும். இதனால், இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த சீரட்ட தொழில் முனைவர்கள் தொடர்பாக சரியான தொழிற் சார் பயிற்சியை வழங்கும் பொருட்டு முன் நிபுணத்துவ சான்றிதழ்களை (RPL) கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு 2023 ஆம் ஆண்டு கால கட்டத்தில்

பயிற்சிப் பிரிவினால் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென பெருமளவு கேள்வி காணப்படுவதுடன், இதன் வாயிலாக நிறுவனத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

5.3. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை நாடளாவிய ரீதியாக விஸ்தீரணப்படுத்துதல்



5.3.1. பயிற்சி நிலையங்களின் செயற்பாடுகள்

2023 ஆம் ஆண்டளவில் முழு நாடு பூராகவும் செயற்பட்ட பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 11 ஆகக் காணப்பட்டது. இந் நிலையங்களின் ஊடாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த பயிற்சிப் பாட நெறிகள் செயற்படுத்தப்பட்டன. அதன் கீழ் கொழும்பில் தலைமை அலுவலகம் இயங்கிய வண்ணம் இரத்தினபுரியில் பிரதான பிரதேச நிலையமும், இது தவிர கண்டி, காலி, நாஉல, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, நிவிதிகல, அத்தனகல்ல, சேனபுர, இரத்தினபுரி இளைஞர் சேவைகள் சபை அலுவலகம் போன்ற அடிப்படையில் 11 பயிற்சி நிலையங்கள் செயற்பட்ட வண்ணமிருந்தன.

5.3.2. 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய நிலையங்கள்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த பயிற்சிப் பாட நெறிகளை நாடளாவிய ரீதியாக விஸ்தீரணப்படுத்திய வண்ணம் கைத்தொழிலில் ஈடுபடுவோரை அதிகரிக்கும் முகமாக 2023 ஆம் ஆண்டு கால கட்டத்தில் நான்கு புதிய நிலையங்களை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிலையங்களாக மரதானை தொழில்நுட்பக் கல்லூரி வலாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையம், பதுளை, கம்பலை மற்றும் லக்கல ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட நிலையங்கள் ஆகியவற்றை சுட்டிக் காட்டலாம். அதன் பிரகாரம், தற்சமயம் மொத்தமாக 15 நிலையங்களின் ஊடாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த பயிற்சிப் பாட நெறிகளும், ஏனைய தொழில்நுட்ப நிகழ்ச்சிகளும் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன.

5.4. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையுடன் தொடர்புடைய கொள்திறன் விருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல்

பயிற்சிப் பாட நெறிகளை செயற்படுத்தும் பணியுடன் தொடர்புடையதாக நிறுவனத்தின் கொள்திறன் விருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவற்றை இவ் வருட காலப் பகுதியினுள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.4.1. பயிற்சிப் பிரிவு தொடர்பாக தகவல் முகாமைத்துவத் தொகுதியை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

பாட நெறிகளைத் திட்டமிடுதல், மாணவர் ஆட் சேர்ப்பு, பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் செயற்பாட்டிலிருந்து பயிற்சியாளர்களைத் தொழில் வாய்ப்புகளுக்கு ஈடுபடுத்துதல் வரையான செயற்பாட்டின் நிர்வாக மற்றும் முன்னெடுப்புடன் தொடர்புடையதாக முகாமைத்துவத் தகவல் தொகுதியை நிலை நாட்ட வேண்டியதன் தேவை தொடர்பாக அடையாளம் காணப்பட்டமையால், 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சியளிப்பு நிறுவனத்துடன் கூட்டிணைந்த வண்ணம், அத் திணைக்களம் பயன்படுத்துகின்ற முகாமைத்துவத் தகவல் தொகுதியை நிறுவனத்துக்கு பெற்றுக் கொள்வதற்குத் தேவையான முதல் நிலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இத் தொகுதியின் பிரகாரம் செயற்படுவதன் வாயிலாக மிகச் சிறந்த வினைத் திறனுடன் பயிற்சிப் பிரிவின் செயற்பாடுகளை முன்னெடுத்தல் நோக்கமாகக் காணப்படுகின்றது.

5.4.2. விடயப் பரப்புடன் கூட்டிணைந்த ஏனைய பொதுச் செயற்பாடுகள்

சான்றிதழ் கையளிப்பு நிகழ்வு

நிறுவனத்தின் பயிற்சிப் பாட நெறிகளை நடாத்துகின்ற மாணவர்களதும், வெளித் தரப்பு குடிகளினதும் ஈர்ப்பை பெருமளவில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பிரிவினால் இரண்டாவது தடவையாகவும் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் தரமுயர்ந்த வகையில் டிப்ளோமா மற்றும் தேசிய தொழிற் சார் தகைமை 4 மட்டத்துக்கு சமனான சான்றிதழ்களை கையளிக்கும் விழாவை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் போது டிப்ளோமா தொடர்பாக 33 மாணவர்களுக்கும், NVQ 4 தகைமை தொடர்பாக 77 மாணவர்களுக்கும் சான்றிதழ்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5.4.3. பணிப் பட்டறைகள், மா நாடுகள் மற்றும் கண்காட்சிகள்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்ததாக சர்வதேச ரீதியாக செயற்படுத்தப்படுகின்ற வர்த்தகக் கண்காட்சிகளின் கீழான ஒரு நிகழ்வாக ஜுவெல்ஸ் கண்காட்சி காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் ஒழுங்கு செய்யப்பட்ட ஜுவெல்ஸ் கண்காட்சிக்கு நிறுவனத்தின் காட்சிக் கூடமொன்றை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் வாயிலாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்ததாக பயிற்சிப் பிரிவினால் செயற்படுத்தப்படுகின்ற பயிற்சிப் பாட நெறிகள் தொடர்பாக வெளித் தரப்பு சமூகத்தினருக்குத் தகவல்களை முன் வைத்தல் இலகுவாக அமையப் பெற்றுள்ளது.

இவ் வருடம் கல்வி அமைச்சினால் இலங்கை நூதனசாலையை மையப்படுத்திய வண்ணம் நடாத்தப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சியில் நிறுவனம் பங்கேற்றது.

ஆராய்ச்சி பிரிவு



6. ஆராய்ச்சிப் பிரிவு

6.1 கருத்திட்டம் : - இலங்கையின் இரத்தினக் கல் நிதியங்களை ஆராய்தல் மற்றும் மதிப்பீடு

இக் கருத்திட்டம் இலங்கையிலுள்ள இரத்தினக் கல் வைப்புகளைத் தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்யக் கூடிய வகையிலும், 1 : 50,000 அளவிலான தேசப் படத் தொகுப்பை உறுவமைப்பதற்கெனவும் பிரதேசச் செயலாளர் மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது. இதன் போது, ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவு ரீதியாகவும் தொடர்புடைய இரத்தினக் கல் தோற்றுவாய் வரைபடங்களும் தொழில்நுட்ப ரீதியான அறிக்கையும் தயாரிக்கப்படும்.

6.1.1 நியாகம பிரதேசச் செயலாளர் பிரிவு

11,110 ஹெக்டயார் அளவிலான நியாகம பிரதேசச் செயலாளர் பிரிவு, காலி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப் பிரதேசச் செயலாளர் பிரிவினுள் குறிப்பாக முதல் நிலை வைப்புகள் நிலவுகின்றன. இவ் வைப்புகள் புவியியல் தொற்றுவாயின் பிரகாரம் வைப்புகளாகக் காணப்படுவதுடன், அவை ஹொரங்கல்ல, நியாகம தெற்கு போன்ற பிரதேசங்களில் வெளித் தோன்றியுள்ளன. இவ் வைப்புகளில் கனகம் (Chrysoberyl) மற்றும் அலெக்சாண்டரைட் (Alexanderite) போன்ற பெறுமதி மிக்க இரத்தினக் கற்கல் தேங்கியுள்ளன.



வரை படம் 01 - இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படம் - நியாகம பிரதேசச் செயலாளர் பிரிவு

இரத்தினக் கல் படிகத்தின் தடிப்பு (0.5 - 3 அடிகள்) மற்றும் நிதியத்துக்குள்ள ஆழம் (10 - 20 அடிகள்) இடத்தின் பிரகாரம் மாறுபடக் கூடியதாகக் காணப்படுகின்றது. மேலும், பிட்டிகல வடக்கு, கொடாமுன, மார்துபிட்டிய, உஹன் ஒவிட்ட ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை அண்டியதாக முதல் நிலை மற்றும் குறைந்த ஒட்டமுள்ள இரத்தினக் கல் நிதியங்கள் காணப்பட்டாலும், பொருளாதார ரீதியாகப் இலாபமான மட்டத்தில் அகழ்வுக் கருத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய வகையில் போதியளவில் இரத்தினக் கற்கல் இங்கு வெளிக் காட்டப்பட்டன. இப் பிரதேசச் செயலாளர் பிரிவு தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இரத்தினக் கல் தோற்றுவாய் வரை பட இலக்கம் 1 இன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



வரை படம் 02 (a)

6.1.2 கிரிஎல்ல பிரதேசச் செயலாளர் பிரிவு

கிரிஎல்ல பிரதேசத்தில் இரத்தினக் கல் வைப்புகள் குறிப்பாக உருமாற்றத் தோற்றத்துடன் (Metamorphic origin) கூடியதானவையாக காணப்படுகின்றது. அவ்வாறே எஞ்சிய நிலையிலுள்ள நிதியங்களாக திரவ நிலையிலுள்ள மற்றும் மீதமான நிதியங்கள் பெருமளவில் நிலவுகின்றன. திரவ நிலை மீதமுள்ள நிதியங்கள் குறிப்பாக களு கங்கை மற்றும் குரு கங்கையை அண்மித்துக் காணப்படுகின்றன. குருகம்மோதர, தொடம்பே, பொஹொரபாவ, எல்லாவல, எபிட்டவல, அல்லகாவ, யட்டிபஹுவ, கலதுர, தொடம்பே, முதுன் கொட்டுவ, மாட்டுவாகல, புரான நெதுன் விகாரை ஆகிய பிரதேசங்களில் அதிகளவில் இரத்தினக் கல் நிதியங்கள் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பிரிவு முழுதும் முனைப்பான இரத்தினக் கல் அகழிகள் காணப்படுவதுடன், 10 - 50 அடிகள் வரை ஆழமான படிம அகழிகளின் ஊடாகவும், கிட்டத்தட்ட 5 - 20 அடி ஆழமற்ற சுரங்களின் மூலமும் இரத்தினக் கற்கல் பெறப்படுகின்றன.

இரத்தினக் கல் நிதியங்கள் காணப்படுகின்ற படலத்தின் பொதுவான ஆழம் குறிப்பாக 6 - 20 அடிகளாகக் காணப்படுவதுடன், இவை மாற்றமடைந்த நிலையிலும் நிலவுகின்றன. நிலப் பரீட்சிப்புகளின் மூலம் ஒரு வைப்புப் படலம் மாத்திரமே இது வரை கிடைக்கப் பெற்றுள்ளது. புஷ்பராகம் (topaz) மற்றும் கனகம் (chrysoberyl) தவிர ஏனைய அனைத்து வகையான இரத்தின வகைகளும் இங்கு காணப்படுகின்றன. கிரிஎல்ல பிரதேசத்தில் இது வரை முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் பிரகாரம் அதி கூடிய இரத்தினக் கல் தோற்றுவாயுள்ள பிரதேசமாக இப் பிரதேசம் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், அங்குள்ள பல இடங்கள் இன்றளவிலும் அகழ்வு செய்யப்பட்டுள்ளன.



வரை படம் 02 (b)

வரை படம் 02 (c)

வரை படம் 02 (a) – இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படம் - கிரிஎல்ல பிரதேசச் செயலாளர் பிரிவு
வரை படம் 02 (b) – எபிட்டவல பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள இரத்தினக் கல் நிதியத்தின் குறுக்கு வெட்டு (ஆழ் மீற்றர்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது)
வரை படம் 02 (c) - கிரிஎல்ல பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற ஸ்பைனல் (Spinel), நீலமாணிக்கம் (sapphire) மற்றும் நீல அபட்டைட் (blue apatite) நுணுக்குக் காட்டி புகைப்படம்



6.1.3 இங்கிரிய பிரதேசச் செயலாளர் பிரிவு

இப் பிரதேசத்தில் 70% ஆன திடல் சார்ந்த ஆராய்ச்சிகள் நிறைவடைந்துள்ளன. அப் பிரதேசம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட முதல் நிலை இரத்தினக் கல் தோற்றுவாய் வரை பட இலக்கம் 01 இன் மூலம் முன் வைக்கப்பட்டுள்ளது. இதன் போது தயாரிக்கப்பட்ட இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு கைத் துளையிடல் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அம் மாதிரிகள் தொடர்பாக ஆய்வு கூட ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமிருப்பதுடன், 2024 முதலாவது காலாண்டினுள் அதனை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

வரை படம் 03 - முதல் நிலை இரத்தினக் கல் தோற்றுவாய் நில வரை படம் - இங்கிரிய பிரதேசச் செயலாளர் பிரிவு

6.1.4 தெஹி ஓவிட்ட பிரதேசச் செயலாளர் பிரிவு

கேகாலை மாவட்டத்தின் தெஹி ஓவிட்ட பிரதேசச் செயலாளர் பிரிவில் இரத்தினக் கல் நிதியங்கள் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகள் இன்றளவில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமிருப்பதுடன், தற்சமயம் அடையாளம் காணப்பட்டுள்ளவாறு களனி ஆற்றுப் பள்ளத்தாக்கை அண்டியதாக இரத்தினக் கல் நிதியங்கள் காணப்படுகின்றன. யோகம, எபல்லபிட்டிய, தல்தூவ, உடுவில, மாதொல, தெஹென்வக, பனாவல மற்றும் மானியம்கம ஆகியன அதி கூடிய இரத்தினக் கல் தோற்றுவாயுள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. எதிர்வரும் திடல் சார் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இறுதி இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படம் மற்றும் தொழில்நுட்ப அறிக்கையை 2024 ஆம் ஆண்டில் வெளியிடுவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

வரை படம் 04 (a)

வரை படம் 04 (b)

வரை படம் 04 (c)



வரை படம் 04 (d)

வரை படம் 04 (a)- சீதாவக்கை ஆற்றை அண்டிய தியலு மீத மாதிரிகளை பெற்றுக் கொள்ளுதல்

வரை படம் 04 (b)- மானியம்கம பிரதேசத்தில் முதல் நிலை வைப்புகள் காணப்படுகின்றதா எனும் விடயத்தை அடையாளம் காணும் பொருட்டு மாதிரிகளை பெற்றுக் கொள்ளுதல்

வரை படம் 04 (c)- திம்பிரியபொல பிரதேசத்தை அண்டிய ஆற்றொழுகின் துளையிடல் மாதிரிகளை பெற்றுக் கொள்ளுதல்

வரை படம் 04 (d)- தெஹி ஓவிட்ட பிரதேசச் செயலாளர் பிரிவில் திடல் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்ட இடங்கள்

6.1.5 அயகம பிரதேசச் செயலாளர் பிரிவு

அயகம பிரதேசச் செயலாளர் பிரிவில் முதல் நிலைத் திடல் ஆராய்ச்சி செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முதல் நிலை இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படத்தின் கீழ் நிலத் துளையிடுகை மாதிரிகளை பெற்றுக் கொள்கின்ற திடல் பணிகல் முன்னெடுக்கப்பட்டன. தற்சமயம் அம் மாதிரிகளின் ஆராய்ச்சிகள், இறுதி அறிக்கை மற்றும் இரத்தினக் கல் தோற்றுவாய் நில வரைபடங்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. களு கங்கை, கல துரு ஒய, ஹீன் கங்கை, பஸ்கங் கால்வாய், தியலு நிதியம் மற்றும் பல்லேகட பிரதேசத்தில் முதல் நிலை படிம இரத்தினக் கல் நிதியங்கள் அடையாளம் காணப்பட்டன.

வரை படம் 05 - திடல் பணிகள்

6.1.6 பெல்மடுல்ல பிரதேசச் செயலாளர் பிரிவு

இப் பிரதேசச் செயலாளர் பிரிவில் நிலத் துளையிடல் மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன், அத் தரவுகளின் பிரகாரம் இரத்தினக் கல் தோற்றுவாய் நில வரைபடம் மற்றும் இறுதி அறிக்கை புதுப்பிக்கப்பட்ட வண்ணமுள்ளது.

வரை படம் 06 - திடல் பணிகள்

6.2 கருத்திட்டம் : - இரத்தினக் கற்களுக்கு பெறுமதி ஒன்று சேர்க்கும் செயற்பாட்டை விஸ்தீரணப்படுத்துதல்

6.2.1 மின் அடுப்பின் ஊடாக கற்கலை வெப்பமூட்டி மெருகூட்டும் பொருட்டு புதிய செயன் முறைகளை அறிமுகப்படுத்துதல்

கற்களை வெப்ப மெருகூட்டுகை செயற்பாட்டின் ஊடாக அவற்றின் நிறத்தை நீல நிறமாக்கும் செயற்பாடு துறை சார்ந்ததாக மேலெழுந்துள்ள பிரதானமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது., இதற்குத் தீர்வாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துக்கு உரித்தானதாகக் காணப்படுகின்ற அடுப்பின் உதவியுடன் புதிதாகச் செயன் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் போது கற்கலின் மாதிரிகள் பெறப்பட்டு அவற்றை நான்கு பகுதிகளாகப் பிரித்து அவற்றை முறையே சாதாரண செயன் முறை, ஒக்சிசன் வாயுவுடன், நைத்திரசன் வாயுவுடன் மற்றும் நைத்திரசன் வாயுவைத் தொடர்ச்சியாக உட் செலுத்திய வண்ணம் வெப்ப நிலையை 1700 பாகை செல்சியசில் 12 மணித்தியாலம் தொடர்ச்சியாக வெப்ப மெருகூட்டல் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ் அனைத்து மாதிரிகளையும் வெப்ப மெருகூட்டல் செயற்பாட்டுக்கு உட்படுத்துவதற்கு முன்னைய மற்றும் பின்னைய சந்தர்ப்பங்களின் போது நிறத் தரப் பிரிப்பு, UV - Vis உள்ளீர்ப்பு நிறங் காட்டி, கதிரியக்க உள்ளீர்ப்பு நிறங் காட்டி மற்றூம் இரத்தினவியல் நுணுக்குக் காட்டி புகைப்படங்கள் பெறப்பட்டு ஆராயப்பட்டன.

இந் நிற மாறுபாடுகள் தொடர்பாகக் கீழுள்ள அட்டவணை 1.1 இலிருந்து 1.4 வரை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இதன் போது 1700 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் 12 மணித்தியாலம் தொடர்ச்சியாக நைத்திரசன் வாயுவை உட் செலுத்துவதன் மூலம் கற்கலின் வர்ணம் அதிகரித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அட்டவணை 1.1 : சாதாரண நிலைகளில் 1700 பாகை செல்சியசில் 12 மணித்தியாலம் மெருகூட்டப்பட்ட TG மாதிரிகளின் வெப்ப சிகிச்சை

மாதிரிகளின் பெயர்	TG 41/1	TG 43/1	TG 45/1	TG 50/1
வெப்ப மெருகூட்ட லுக்கு முன்				
வெப்ப மெருகூட்ட லுக்கு பிற்பாடு				

வரை படம் 07 - மாதிரி - 01

அட்டவணை 1.2 : ஒக்சிசன் நிரப்பப்பட்ட நிலையில் 1700 பாகை செல்சியசில் 12 மணித்தியாலம் மெருகூட்டப்பட்ட TG மாதிரிகளின் வெப்ப சிகிச்சை

மாதிரிகளின் பெயர்	TG 41/2	TG 43/2	TG 45/2	TG 50/2
வெப்ப மெருகூட்டலுக்கு முன்				
வெப்ப மெருகூட்டலுக்கு பிற்பாடு				

வரை படம் 07 - மாதிரி - 02

அட்டவணை 1.3 : நைதரசன் நிரப்பப்பட்ட நிலையில் 1700 பாகை செல்சியசில் 12 மணித்தியாலம் மெருகூட்டப்பட்ட TG மாதிரிகளின் வெப்ப சிகிச்சை

மாதிரிகளின் பெயர்	TG 41/3	TG 43/3	TG 45/3	TG 50/3
வெப்ப மெருகூட்டலுக்கு முன்				
வெப்ப மெருகூட்டலுக்கு பிற்பாடு				

வரை படம் 07 - மாதிரி - 03

அட்டவணை 1.4 : நைதரசன் தொடர்ச்சியாக உட் செலுத்தப்பட்ட நிலையில் 1700 பாகை செல்சியசில் 12 மணித்தியாலம் மெருகூட்டப்பட்ட TG மாதிரிகளின் வெப்ப சிகிச்சை

மாதிரிகளின் பெயர்	TG 41/4	TG 43/4	TG 45/4	TG 50/4
வெப்ப மெருகூட்டலுக்கு முன்				
வெப்ப மெருகூட்டலுக்கு பிற்பாடு				

வரை படம் 07 - மாதிரி - 04

இதன் போது அதி கூடிய வெப்ப நிலையில் நைதரசன் வாயு அணுவாக பரிமாற்றமடைவதுடன், அவற்றின் மூலம் மின் அடுப்பினுள் சதாரண அமுக்கத்தைக் காட்டிலும் 0.3 பார் அமுக்கம் தோற்றுவிக்கப்படும், இதனூடாக Ti^{2+} மற்றும் Fe^{2+} அயனிகளது Inter Valance Charge Transfer (IVCT) செயற்பாடு நன்னெறி மிக்கதாக இடம் பெறுவதாகக் குறிப்பிடலாம். இது தொடர்பாக Gemological Institute, China University of Geoscience இனது ஆராய்ச்சிகளுடன் கூட்டிணைந்து மேலும் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

6.2.2 கதிரியக்க ஆபிரிக்க இளஞ் சிவப்பு நீல மாணிக்கம் (Sapphire) தொடர்பான விபரமான ஆராய்ச்சி

கதிர்வீச்சு (Irradiation) செயன் முறையின் ஊடாக குருவிந்த இரத்தினக் கல் எனும் அதாவது ரூபி மற்றும் சபாயர் இரத்தினக் கற்களின் வர்ணத்தை மேலுயர்த்தும் செயற்பாடுகள் தொண்டு தொட்டு மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. எனினும், அண்மைக் காலமாக LMHC (Laboratory Manual Harmonization Committee) இத்தகைய அடிப்படையில் மெருகூட்டப்பட்ட ரூபி மற்றும் சபாயர் இரத்தினக் கற்கலை சீராக அடையாளம் காணுதல் தொடர்பாக பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன (LMHC Press release, March 14, 2023). இதற்கு ஏதுவான காரணியாக சிறு அளவிலானோரினால் வைத்தியசாலைகளிலுள்ள புற்று நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் கெமா உபகரணங்களின் மூலம் ஆபிரிக்க ரூபி மற்றும் இளஞ் சிவப்பு சபயர்களது (Pink Sapphire) நீல நிறத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் மற்றும் அவற்றை சர்வதேச சந்தைக்கு முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையுமாகும். எனினும், இம் மெருகூட்டல் தொடர்பாக எவ்வித ஆராய்ச்சியும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதனை சர்வதேச இரத்தினவியல் ஆய்வு கூடங்களின் மூலமும் அடையாளம் காண முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால், இது தொடர்பாக விஞ்ஞான ரீதியாக ஆராய்தல் மிக முக்கியத்துவமிக்க விடயமாகக் காணப்படுகின்றது. இது தொடர்பாக ஆராயும் பொருட்டு மெடகஸ்கார் நீல / சிவப்பு மாதிரிகளை பெற்று அவற்றைத் தயாரித்து Horticultural crop Research and Development Institute (HORDI) இலுள்ள கெமா உபகரணங்களின் மூலம் 160 KGry அளவீட்டில் அனைத்து மாதிரிகளையும் கெமா கதிரியக்கத்துக்கு உட்படுத்தப்பட்டன. இவ் அனைத்து மாதிரிகளும் கெமா கதிரியக்கத்துக்கு முன்னைய மற்றும் பிற்பாடான சந்தர்ப்பங்களில் அவற்றின் மூலம் வெளியாக்கப்பட்ட கதிர்கள் தொடர்பான மதிப்பீடு தேசிய அணுச் சக்தி அதிகார சபையுடன் கூட்டாக முன்னெடுக்கப்பட்டது.

இவ் ஆராய்ச்சிகளின் வாயிலாக வரை பட இலக்கம் 01 இன் பிரகாரம் அனேகமான மடகஸ்கார் சிவப்பு இரத்தினக் கற்களிலிருந்த நீல வர்ணம் குறைவடைந்தமை தொடர்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும், மெருகூட்டப்பட்ட பிற்பாடு இது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட UV – Visible மற்றும் FTIR பகுப்பாய்வில் குறிப்பிடத்தக்களவான மாறுபாடு அவதானிக்கப்படவில்லை.

Sample No.	Appearance before Irradiation	Color of the samples before Irradiated	Appearance after Irradiation	Color of the samples after Irradiated
AS 01		Pink color		Hot Pink color
AS 02		Violet color		Peach color
AS 04		Purplish Blue		Peach mixed Blue
AS 05		Violet color		Pink color
AS 06		Blue		Peach mixed Blue
AS 07		Pink color		Hot Pink color
AS 08		Purplish Pink color		Pink color

வரை படம் 08 - சபாயர் மாதிரிகளின் பகுப்பாய்வு

இதன் மாற்றத்தை அடையாளம் காணக் கூடிய பிரதான காரணியாக, கெமா கதிரியக்கத்தின் பிற்பாடு X - Ray கதிரியக்கத்தை வெளியேற்றுகின்ற நுணுக்கமான மாறுபாடு அவதானிக்கப்பட்டிருப்பதுடன், அதனை இத்தகைய கற்கலை அடையாளம் காணும் பொருட்டு பயன்படுத்த முடியுமா எனும் விடயம் தொடர்பாக மேலும் ஆராயப்பட்ட வண்ணமுள்ளது.

6.2.3 கிரிஞ்சியில் கெவுடவை நீக்கி பெறுமதி அதிகரிக்கும் செயன் முறையைக் கண்டறிதல்

இலங்கையில் பல்வேறு கிரிஞ்சி (Spinel) வகைகள் கிடைக்கப் பெறுவதுடன், அவை பல்வேறு இரத்தின நிலையை விடக் குறைந்த கற்கலாகக் காணப்படுகின்றன. எனினும், இவை தொடர்பான மெருகூட்டல் செயன் முறைகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இதனிடையே கருமையான மற்றும் வர்ணம் குறைந்த கெவுட சபாயராக கிரிஞ்சி காணக்

கிடைக்கின்றது. இவை கெவுட கிரிஞ்சி எனப்படுகின்றன. இக் கிரிஞ்சிகள் தொடர்பாக மெருகூட்டல் செயன் முறைகளை இனங் காணல் அத்தியாவசியமான விடயமாகக் காணப்படுகின்றது.

இதனால், தேர்ந்தெடுக்கப்பட்ட கெவுட கிரிஞ்சிகளைப் பெற்று அவற்றின் சமாந்தர நிலை இரண்டு முகங்களாக மெருகூட்டி வெப்ப மெருகூட்டலுக்கு முன்பும், பின்புமான சந்தர்ப்பங்களில் இரத்தினவியல் நுணுக்குக் காட்டி வழியே உள்ளகத்திலுள்ள கழிவுக் கனியங்களின் (Inclusions) புகைப் படங்கள் பெறப்பட்டன. மேலும், இம் மாதிரிகளின் (UV – Visible) மற்றும் Infrared உள்ளீர்ப்பு நிறங் காட்டிகள் தொடர்பான வெப்ப மெருகூட்டலுக்கு முந்திய மற்றும் பிந்திய ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

வரை பட இலக்கம் 02 இன் பிரகாரம், அதி கூடிய வெப்ப நிலை 900 பாகை செல்சியசில் ஒரு மணித்தியாலம் வெப்ப மெருகூட்டலை முன்னெடுக்கையில் குறைந்த விகிதாசாரமுள்ள "கெவுட" உறுகியிருப்பதாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மேலும், Raman வர்ண நிறந் தீட்டியில் 600 மற்றும் 800 Cm^{-1} இடையே மீதிகள் வெப்ப மெருகூட்டலுக்கு முன்பும், பின்புமான சந்தர்ப்பங்களில் மாற்றத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை வெப்ப மெருகூட்டப்பட்ட கிரிஞ்சியை அடையாளம் காணும் பொருட்டு பயன்படுத்தக் கூடிய திறன் காணப்படுகின்றது.

வெப்ப மெருகூட்டலுக்கு முன்பு

வெப்ப மெருகூட்டலுக்கு பிற்பாடு



வரை படம் 09 - மாதிரி பகுப்பாய்வு

6.2.4 லக்மினி வாயு அடுப்பின் மூலம் திக் சில்கி கெவுடகளின் வர்ணம் மற்றும் தெளிவுத் தன்மையை அதிகரித்தல் தொடர்பான ஆராய்ச்சி

இவ் ஆராய்ச்சிகளின் வாயிலாக கடந்த வருட காலப் பகுதியில் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளின் பிரகாரம் சிறந்த வர்ணம் மற்றும் தெளிவுத் தன்மையை பெற்றுக் கொள்ளக் கூடிய திறன் கிடைத்திருப்பினும், சிறு அளவிலான ஒக்சிசனாக்களின் கீழ் வெப்ப மெருகூட்டல் மூலம் இந் நிலையை அடையக் கூடிய திறன் கிடைத்துள்ளது. இதன் போது மேலும் வர்ண நாடாவாக செறிவான வலயங்களுடன் கூட்டிணைந்த வர்ணங்கள் அதிகரித்தல் (தொரவலவுடன் கூடியதாக) போன்ற குறைப்பாடுகள் காணப்பட்டமையால் இவ் வருட காலப் பகுதியிலும் பல்வேறு ஒக்சிசனேற்ற நிலைகளின் கீழ் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், இது வரை சறு அளவிலான ஒக்சிசனேற்ற நிலைகளின் கீழ் கிடைக்கப் பெற்ற பலன் களை மேலும் தாண்டிச் செல்லக் கூடிய நிலை அல்லது காணப்பட்ட இடர்ப்பாடுகளை புறந் தள்ள முடியாத நிலை ஏற்பட்டமையால் அடுத்த வருட காலப் பகுதி தொடர்பாகவும் இவ் ஆராய்ச்சிகள் நீடிக்கப்பட்டன.

6.2.5 இருண்ட அடர் வர்ண கிரிஞ்சிகளின் தெளிவுத் தன்மையை அதிகரித்தல் தொடர்பான ஆராய்ச்சிகள்

அடர் வர்ண கிரிஞ்சி மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி பல்வேறு வெப்ப நிலைகள் மற்றும் வளி மண்டலவியல் நிலைகளின் கீழ் வெப்ப மெருகூட்டல் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போது தெளிவுத் தன்மையில் குறிப்பிடத்தக்களவில் மாற்றம் காணப்படாதிருந்ததுடன், ஆராய்ச்சிகள் அடுத்த வருட காலப் பகுதி வரை நீடிக்கப்பட்டது.

6.3 கருத்திட்டம் : - இரத்தினக் கற்கலின் வர்ணத்தை அதிகரிக்கும் பொருட்டு மூன்றாவது வாயுவின் (H_2, N_2, Ar, CO_2) தாக்கம் தொடர்பாக அடையாளம் காணுதல் மற்றும் மின் அடுப்புப் பயன்பாட்டின் வழியே கெவுட தொடர்பாக மெருகூட்டல் நிலையை நிலை நாட்டுதல்

லக்மினி அடுப்பில் ஒக்சிசன் மற்றும் திரவப் பெற்றோலிய வாயுவுக்கு மேலதிகமாக அதில் ஒக்சிசனேற்றத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு மூன்றாவது வாயுவொன்று நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது. எனினும், எமது ஆராய்ச்சிகளின் வாயிலாக இது வர்ணத்தை அதிகரிக்கும் பொருட்டு ஒரு சில சந்தர்ப்பங்களில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு ஏதுவான பிரதான காரணியாக இம் மூன்றாவது வாயுவின் ஊடாக கெவுட துரிதமாக குளிர்மையடைதல் வர்ண அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. இதனால், இவ் ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் தற்சமயம் பயன்படுத்தப்படுகின்ற லக்மினி அடுப்பை நவீனமயப்படுத்துவதற்குத் திட்டங்கள் உறுவமைக்கப்பட்டு லங்கா ரிபெக்ரரீஸ் நிறுவனத்துடன் தேவையான பணிகள் கூட்டாக முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.



வரை படம் 10 - லக்மினி அடுப்பை நவீனமயப்படுத்துவதற்கான உத்தேசத் திட்டம்

6.4 கருத்திட்டம் : - இலங்கையிலுள்ள இரத்தினக் கற்கலின் பழுதுகளை நிரப்பும் பொருட்டு பொருத்தமான எண்ணெய் வகைகளை அடையாளம் காணுதல்

இக் கருத்திட்டத்தின் கீழ் நீலமணி (Sapphire) இரத்தினக் கற்கலிலுள்ள பழுதுகளை நிரப்புதல் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது வெட்டி மெருகூட்டப்பட்ட நீலமணிகளில் வெளிப் புறமாக காணக் கிடைக்கின்ற பழுதுகளை நிரப்பும் பொருட்டு கிலிசரீனை பயன்படுத்தக் கூடிய வாய்ப்பிருப்பதாக ஆராய்ச்சிகளின் வாயிலாக அடையாளம் காணப்பட்டது.

வரைபடம் 11 - பழுதுகளை நிரப்பும் பொருட்டு பொருத்தமான எண்ணெய் வகையொன்றை அடையாளம் காணும் பொருட்டு ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்

6.5 கருத்திட்டம் : - நனோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் வர்ணமிக்க தங்கம் கலந்த உலோகமொன்றை தயாரித்தல்

இக் கருத்திட்டத்தின் கீழ் நனோ தொழில்நுட்பத்தின் ஊடாக வர்ணமிக்க தங்கத் துகள்கள் உற்பத்தி தொடர்பாக முதல் நிலை ஆராய்ச்சிகளை முன்னெடுத்து சிவப்பு நிற தங்கம் உள்ளடங்கிய உற்பத்திகள் உறுவமைக்கப்படுகின்றன.

வரை படம் 12 - வர்ணமிக்க தங்கம் கலந்த உலோகத்தை உறுவமைக்கும் பொருட்டு ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்

6.6 <u>கருத்திட்டம் : - இலங்கையின் பாரம்பரிய தங்காபரண அலங்கரிப்புகள் தொடர்பான பெயரீட்டைத் தயாரித்தல்</u>

இலங்கை வரலாற்றில் காணக் கிடைக்கின்ற பல்வேறு கலை அம்சங்கள் உள்ளடங்கிய உறுவமைப்புகளில் இலங்கையின் பாரம்பரிய ஆபரணங்கள் மிக விசேடமான இடத்தை அடையப் பெற்றுள்ளன. இவ் ஆபரணங்களில் காணக் கிடைக்கின்ற மிக விசேடமான பாரம்பரிய அலங்கரிப்புகளைப் பாதுகாத்த வண்ணம் அவை தொடர்பான புதிய நிர்மாணிப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றைத் தேசிய மற்றும் சர்வதேச சந்தையினுள் வியாபிக்கச் செய்யும் நோக்கில் விபரமான பெயர்ப் பட்டியலொன்றைத் (Catalogue) தயாரிக்கும் செயற்பாட்டை, நிறுவனத்தின் 2023 - 2024 வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தினுள் உள்ளடக்கி, அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

இது தொடர்பாகப் பொருத்தமான மூலாதாரங்களாக ஆதி காலம் தொட்டு இலங்கைக்குத் தனித்துவமான ஆபரண அலங்கரிப்புகள் குறிப்பாக தேசிய நூதனசாலையில் பாதுகாக்கப்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டது. அதன் பிரகாரம், அப் பாரம்பரிய ஆபரண அலங்கரிப்புகளை பிரதியிடும் மற்றும் புகைப்படங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேசிய நூதனசாலை திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் மற்றும் அவர்களது அறிவுத் திறன், திறன்கள், அனுபவங்கள், தொழில்நுட்பம், மானிட மற்றும் பௌதீக வளங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்ட வண்ணம் இக் கருத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் பொருட்டு எமது நிறுவனம், தேசிய நூதனசாலை திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுக்கு வரும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை உறுவமைத்துள்ளது. அவ்வாறே, இன்றளவில் கொழும்பு தேசிய நூதனசாலையிலுள்ள ஆபரண அலங்கரிப்புகளைப் பிரதியிடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

வரை படம் 13 - கொழும்பு தேசிய நூதனசாலையிலிருந்து பிரதியிடப்பட்ட ஒரு சில ஆபரண அலங்காரங்கள்

6.7 கருத்திட்டம் : - ஆய்வு கூடத் தராதர முகாமைத்துவத் தொகுதியை நிலை நாட்டுதல்.

ISO 17025:2017 ஆய்வு கூடத் தராதர அங்கீகாரத்தின் கீழ் நிறுவன ஆய்வு கூட தராதர அங்கீகார செயன் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் போது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆலோசனைகளின் கீழ் தொடர்புடைய பணிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. ஆய்வு கூடத் தராதர முகாமைத்துவம் தொடர்பான முற்று முழுதான செயற்பாடுகளை 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நிறைவுக்குக் கொண்டு வருவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

6.8 கருத்திட்டம் : - கிரந்தங்களை பிரசுரித்தல்

6.8.1 "Sri Lankan Gem Mining Industry for Sustainable Era" எனும் கிரந்தத்தை உறுவமைத்தல்

"Sri Lankan Gem Mining Industry for Sustainable Era" எனும் கிரந்தம், இலங்கையின் இரத்தினக் கல் சுரங்க தொழிற் துறையை பேண்தகு காலப் பகுதிக்கு கொண்டு செல்லுதல் எனும் கிரந்தத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பாகவுள்ளது. இதனை 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் அச்சிடுவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பினும், நிதி சார் ஒதுக்கீட்டுத் தட்டுப்பாடு காரணமாக 2023 ஆம் ஆண்டில் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரை படம் 14 - "Sri Lankan Gem Mining Industry for Sustainable Era" கை நூல்

6.8.2 நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக கை நூலொன்றை அச்சிடுதல்

நிறுவனத்தினால் வெளித் தரப்புக்கு முன் வைக்கப்படுகின்ற ஆய்வு கூட ஆராய்ச்சி சேவைகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய கை நூல் தயாரிக்கப்பட்டு அச்சிடும் பொருட்டு அச்சிடல் நிலையமொன்றுக்கு முன் வைக்கப்பட்டுள்ளது.



வரை படம் 15 - "Laboratory Services Manual" கை நூல்

6.9 கருத்திட்டம் : - ஆராய்ச்சி மா நாடுகளை நடாத்துதல்

நிறுவனத்தின் முதலாவது வருடாந்த ஆராய்ச்சி மா நாடு 2023.10.25 ஆம் திகதி பண்டார நாயக்க மா நாட்டு சர்வதேச மண்டபத்தில் நடாத்தப்பட்டது. அதன் தலைப்பாக "பேண்தகு இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை நோக்கி" எனும் தொனிப் பொருள் காணப்பட்டது. இதன் போது, 5 உப தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சிகள் தொடர்பான 19 சுருக்கங்கள் முன் வைக்கப்பட்டதுடன், அதன் கலந்தாலோசிப்பு சபை இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் 24 நிபுணர்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் திரு ஜீ. ஜீ. ஐ. யூ. சேனாரத்ன அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட முன் வைப்பு, சிறந்த ஆராய்ச்சி முன் வைப்பாகக் கருதப்பட்டதுடன், அப் பல்கலைக்கழகத்தின் திரு எம். எச். எம். சமரி அவர்களினால் சிறந்த சுவரொட்டி முன் வைக்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சிக் கண்டறிவுகள் தொடர்பாக அறிவூட்டலை மேற்கொள்வதன் மூலம் கைத்தொழிலின் பேண்தகு நிலையை உறுதிப்படுத்துதல் மா நாட்டின் நோக்கமாகக் காணப்பட்டது.

வரை படம் 16 - ஆராய்ச்சி மா நாட்டு சந்தர்ப்பங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கிரந்தம்

6.10 கருத்திட்டம் : - பணிப் பட்டறைகள்

6.10.1 அதி தொழில்நுட்ப உபகரணப் பயன்பாட்டின் மூலமான இரத்தினக் கல் ஆராய்ச்சி தொடர்பான பணிப் பட்டறை

இரத்தினவியலில் அதி தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டின் கீழ் இரத்தினக் கல் பகுப்பாய்வை முன்னெடுக்கும் பொருட்டு அறிவூட்டும் பணிப் பட்டறையொன்று (Workshop on Advanced Instrumental Analysis for Gemmology) இரத்தினக் கல் சார்ந்த 20 கைத்தொழிலாளர்களது பங்கேற்புடன் 2023.09.09 மற்றும் 10 ஆகிய இரண்டு திகதிகளிலும் நிறுவனத்தின் அதி தொழில்நுட்ப ஆய்வு கூடத்தில் நடாத்தப்பட்டது. இதன் வாயிலாக 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ரூபா 240,000.00 ஆன பணத் தொகை நிறுவனத்தினால் ஈட்டப்பட்டுள்ளது.

வரை படம் 17 - அதி தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பான பணிப் பட்டறை

6.10.2 கெவுட வெப்ப மெருகூட்டுகை அறிவை கையளிக்கும் பணிப் பட்டறை

கிட்டத்தட்ட 300 வர்த்தகர்களின் பங்கேற்புடன் பதுளை நூலக கேட்போர் கூடத்தில் கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான புதிய அறிவுத் திறனை கையளிக்கும் பணிப் பட்டறை, 2023.12.21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தின் புகைப் படங்கள் வரை பட இலக்கம் 03 இன் மூலம் காட்டப்பட்டுள்ளன.

வரை படம் 18 - கெவுட வெப்ப மெருகூட்டல் பணிப் பட்டறை

6.11 <u>கருத்திட்டம் : - வெளியீடுகளை பிரசுரித்தல்</u>

SCI Journal Publications:

I. WICKRAMARATHNA ILCS, JALIYA RGC, ILLANGASINGHE KMSCK. Discovering Colour Alteration Conditions and Inclusion Changes of Sri Lankan Black/Brown (Penithora/Maangu) Tourmaline. IJESKA. August 2023;5(2):208-2016.

II. RAMESH TG, JALIYA RGC, ILLANGASINGHE IKMSCK, KURUPPU KADDN. Identification of the Effect of Localization on the Colour Alteration of “Geuda” Gemstones Through the Heat Treatment Using ED-XRF, FTIR, and UV-Vis Spectroscopic Analysis. IJESKA. December 2024;5(3):324-332.

III. UDAWATTE, C.P. , ABEYWEERA, S. , PERERA, L.R.K. , ILLANGASINGHE, S. , WEERASOORIYA, C. , SUTTHIRAT, C. , JAYASINGHE, N. , DHARMARATNE, T. and DIYABALANAGE, S. 2023. Optimized conditions for cobalt diffusion in Sri Lankan colorless topaz and coloration mechanism elucidation through spectro-chemical investigation. Journal of Metals, Materials and Minerals. 33, 1 (Mar. 2023), 73–81. DOI:https://doi.org/10.55713/jmmm.v33i1.1596.

Citation:

IV. The Journal of Gemmology, 2023, Volume 38, No. 7, acknowledges our research publication on Optimized Conditions for Cobalt Diffusion in Sri Lankan Colorless Topaz and Coloration Mechanism Elucidation through Spectrochemical Investigation as a literature of interest.



LITERATURE OF INTEREST

Enhancement of Paraiba tourmaline. *J.G.G.L. Gem Information*, **49**, 2023, 11–14 (in Japanese with English abstract).

Gemstone testing during the jewelry manufacturing process. Lead-glass filled ruby. D. Romanelli and S. Coppola, *Rivista Italiana de Gemmologia/Italian Gemological Review*, No. 16, 2023, 25–31.

Identification method of glue-filled aquamarine. N. Cao, T. Chen, J. Zheng, X. Chen, Y. Zhuang and Z. Wang, *Journal of Gems & Gemmology*, **25**(1), 2023, 45–51, https://tinyurl.com/bdepj8y5 (in Chinese with English abstract).*

Mechanism of Be-thermodiffusion in rutile inclusions of fancy sapphires. M. Rossi, R. Biondi, R. Rizzi, N. Corriero, F. Sequino and A. Vergara, *Crystal Growth & Design*, **22**(11), 2022, 6493–6503, https://doi.org/10.1021/acs.cgd.2c00700.*

Optimized conditions for cobalt diffusion in Sri Lankan colorless topaz and coloration mechanism elucidation through spectro-chemical investigation. C.P. Udawatte, S. Abeyweera, L.R.K. Perera, S. Illangasinghe, C. Weerasooriya, C. Sutthirat, N. Jayasinghe, T. Dharmaratne *et al.*, *Journal of Metals, Materials and Minerals*, **33**(1), 2023, 73–81, https://doi.org/10.55713/jmmm.v33i1.1596.*

Les saphirs chauffés à haute temperature et leurs inclusions identifiables en gemmologie classique [Sapphires heated at high temperatures and their identifiable inclusions in classical gemology]. M. Bouvier, *Revue de Gemmologie A.F.G.*, No. 220, 2023, 22–23 (in French).

The spectroscopy study of different filling materials in tourmaline. J. Sui, *Superhard Material Engineering*, **34**(5), 2022, 59–65, https://tinyurl.com/ycmne9p4 (in Chinese with English abstract).

Study on the common effect of heat treatment, dyeing or irradiation treatment on UV-Vis diffuse reflectance spectra of pearls. J. Yan, S. Fang, X. Yan, J. Sheng, J. Xu, C. Xu and J. Zhang, *Spectroscopy and Spectral Analysis*, **42**(12), 2022, 3697–3702, http://www.gpxygpfx.com/EN/Y2022/V42/I12/3697 (in Chinese with English abstract).*

Update of andesine diffusion. *J.G.G.L. Gem Information*, **49**, 2023, 7 (in Japanese with English abstract).

COMPILATIONS

G&G Micro-World. Aquamarine from Xinjiang, China • Clinochlore and muscovite in quartz from Colorado, USA • Iridescent 'insect wing' in diamond • Patchy yellow trigon on diamond • 'Rainbow mountain' in diamond • Musical note symbol in diamond • Snail-shaped pyrope-diopside inclusion in diamond • Metal sulfide(?) in garnet • Graphite in pink sapphire • Night sky scene in yellow sapphire • 'Eye' on a Tridacninae pearl • Thread-like inclusions of serpentine in brown peridot • Metallic platelets in Paraíba tourmaline • Triplite inclusions in Chinese quartz • Geocronite in fluorite. *Gems & Gemology*, **59**(2), 2023, 222–231, https://tinyurl.com/jv9rnphm.*

Gem News International. Suite of Colombian emerald-and-matrix cabochons • Calcite in a pearl from *Pinctada maculata* • Unusual metallic core in a natural *P. radiata* pearl • Saltwater clamshell beads in freshwater cultured pearls • Quartz with 'rabbit hair' inclusions • Heat-treated rubies from Greenland • Treatment for creating phantom structure in opal • Spring 2023 auction highlights • 2023 Sinkankas Symposium • Sustainability panels at JCK Las Vegas. *Gems & Gemology*, **59**(2), 2023, 242–258, https://tinyurl.com/yy2p3rh2.*

Lab Notes. Star aquamarine • Faceted brucite • Natural diamond with CVD-like fluorescence pattern • Yellow zoning in pink diamonds • Glass imitation of cat's-eye chrysoberyl • 34.59 ct CVD synthetic diamond • CVD synthetic diamonds with invisible markings • Two pearls of Indian cultural significance • 19+ mm South Sea bead-cultured pearl • Linear structures in non-bead cultured pearls • Plastic imitations of emerald • Pink zektzerite. *Gems & Gemology*, **59**(2), 2023, 210–222, https://tinyurl.com/mrxr4cd9.*

வரைபடம் 19 – இதழ்

6.12 <u>கருத்திட்டம் : - பேட்டண்ட் அனுமதிப் பத்திரம்</u>

நனோ பதார்த்தங்களின் பயன்பாட்டின் ஊடாக கொரண்டடம்களது நீல வர்ணத்தை அதிகரிக்கக் கூடிய செயன் முறை தொடர்பாக பேட்டண்ட் உரிமத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

Title of Invention - An economic bulk diffusion technique to enhance the blue colour in corundum using environmentally friendly synthesized Nano material.

Inventors – 1) Rathnayaka Mudiyanselage Naleen Pushpa Kumara Jayasinghe
2) Mohammed Nayeen Mohammed Rifkhan

Application Number - 22945

6.13 <u>கருத்திட்டம் : - தொழில்நுட்பச் சேவைகளை பெற்றுக் கொள்ளுதல்</u>

6.13.1 தனி நபர் காணிகளில் இரத்தினக் கல் நிதியங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள்

குருணாகலை குபல் அங்க, காலி உலுவிட்டிகே சபை தெரனியகல பிரதேசங்களில் தனி நபர் காணியில் இரத்தினக் கல் நிதிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் வாயிலாக 2023 ஆம் ஆண்டு கால கட்டத்தில் நிறுவனத்தினால் ரூபா 239,000.00 ஆன பணத் தொகை ஈட்டப்பட்டது.

வரைபடம் 20 - ஆராய்ச்சிப் பணிகள்

6.13.2 வெப்ப மெருகூட்டல் சேவைகள்

பணம் அறவிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற வெளித் தரப்பு நபர்கள் தொடர்பாக கெவுட வெப்ப மெருகூட்டல் சேவைகளை பெற்றுக் கொடுப்பதன் கீழ் லக்மினி அடுப்பின் மூலம் 18 சேவைகளை கையளிப்பதன் மூலம் இவ் வருட கால கட்டத்தில் ரூபா 216,000 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

6.13.3 அதி தொழில்நுட்ப ஆய்வு கூடச் சேவைகள்

ஆய்வு கூட பகுப்பாய்வுச் சேவைகளைக் கையளிக்கும் செயற்பாட்டின் கீழ் பகுப்பாய்வு தொடர்பான மாதிரிகள் மற்றும் ED - XRF பகுப்பாய்வு தொடர்பான 09 மாதிரிகளின் ஊடாக 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ரூபா 494,000.00 ஆன பணத் தொகையை நிறுவனம் தன் வசம் ஈட்டியுள்ளது.

6.14 கருத்திட்டம் : - புதிய ஆராய்ச்சிக் கண்டறிவுகளை வணிக ரீதியாக்குதல்

கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட புதிய ஆராய்ச்சிகளின் வாயிலான கண்டறிவுகளை வணிக ரீதியாக்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக எமது நிறுவனத்தின் ஆராய்ச்சிகளின் ஊடாகக் கண்டறியப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய ஆராய்ச்சிக் கண்டறிவுகள் முன் வைக்கப்பட்டதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில புதிய கண்டறிவுகள் 2023.12.12 ஆந் திகதி Water’s Edge ஹோட்டல் வலாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது விபரமான முன் வைக்கப்பட்டது.

இல	புதிய கண்டுபிடிப்பு	பிரதான கண்டறிவாளர்	உப கண்டறிவாளர்
01	நிறமற்ற புஷ்பராகத்துக்கான சந்தை ஈர்ப்பை அதிகரித்தல் : கொபோல்ட் கதிரியக்க பிரவேசிப்பு	திரு சந்துன் இலங்கசிங்க	திரு சமல் ஜாலிய திரு எம். நிருஷான்
02	சுற்றாடல் நேயமிக்க பிரித்தெடுக்கபப்பட்ட நனோ பதார்த்தங்களின் பயன்பாட்டின் ஊடாகக் குருந்தம் கனியத்தின் நீல வர்ணத்தை அதிகரிக்கும் முகமாக பொருளாதாரக் கையிருப்புப் பரம்பல் தொழில்நுட்பம்	திரு ஆர். எம். எம். பீ. கே. ஜயசிங்க	திரு எம். என். எம். ரிப்கான்
03	வெளிப்படை இரத்தினக் கல் மதிப்பீடு : உயர் கணினி உதவி இயந்திர கற்கைத் தொகுதி	திரு ஆர். எம். எம். பீ. கே. ஜயசிங்க	திரு எஸ். சுதர்ஷன் திருமதி ஐ. சமரதாச திரு எச். ரனவீர
04	இலங்கையின் இரத்தினக் கல் சுரங்கங்கள் தொடர்பாக பேண்தகு வலுவூட்டல் பதார்த்தங்களை பயன்படுத்துதல்	திருமதி எஸ். விஜேவர்தன	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க திருமதி எம். கே. சீ. ஜயமாலி திரு டப். ஜீ. சீ. என். வவேகெதர
05	துணிகள் தொடர்பாக கனியங்கள் வைப்பிலிடப்பட்ட வலிப் போக்கி கிரீம்கள்	திருமதி எம். ஏ. என். சீ. மந்திரரத்ன	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க
06	இரச அவதானத்தைக் குறைத்தல் : இலங்கையில் சிறு அளவிலான தங்காபரணத் துறை தொடர்பாக சுற்றுச் சூழல் நேயமிக்க தங்கப் பிரித்தெடுப்பு மாற்றீடுகளை அறிமுகப்படுத்துதல்	திருமதி எம். ஏ. என். சீ. மந்திரரத்ன	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க திரு ஆர். எஸ். தியபலனகே திரு தமித் டெ சில்வா திரு எம். என். எம். ரிப்கான்
07	இரத்தினக் கல் மெருகூட்டல் செயற்பாடு தொடர்பான அங்கீகாரமாக பயன்படுத்தும் பொருட்டு அரிசித் தவிடுகளிலிருந்து நனோ சிலிக்கா உற்பத்தி	திருமதி எம். ஏ. என். சீ. மந்திரரத்ன	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க திரு எம். எச். எம். ஷம்ரி திரு பீ. கோவர்தனன்
08	கிரிகல் குவார்ட்ஸ் இனை உற்பத்தி செய்யும் முகமாகப் புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்	திரு யூ. கே. ஐ. தயாரத்ன	திரு பீ. ஜீ. ஆர். டப். கம்லத் செல்வி எச். டப். எம். எம். சந்திரசேன செல்வி ரீ. டீ. அன்ரன்

09	இரத்தினக் கல் படலத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியாகப் பெறுமதி மிக்க கனியங்களைப் பிரித்தெடுத்தல்	திருமதி எஸ். விஜேவர்தன	திரு பீ. ஜீ. ஆர். டப். கம்லத் திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க
10	இலங்கையின் இரத்தினக் கல் வைப்புகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு - இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படம்	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க	திரு பீ. ஜீ. ஆர். டப். கம்லத் திருமதி எஸ். விஜேவர்தன திருமதி எம். கே. சீ. ஜயமாலி திரு டப். ஐ. சீ. என். வவே கெதர திருமதி டப். ஆர். லக்ஷாந்தி
11	வெப்ப மெருகூட்டலின் ஊடாக "கிரி கொத்தர" எனும் தரம் குறைந்த குருந்தம் கற்கலது தராதர நிலைகளை அதிகரித்தல்	திரு டப். ஜீ. சீ. என். வவே கெதர	திரு எம். என். எம். ரிப்கான் திரு பிரஷான் பிரன்சிஸ்
12	லக்மினி வாயு அடுப்பின் வெப்ப மெருகூட்டலின் ஊடாக திண்மப் பட்டு கெவுட கனியத்தை மேம்படுத்துதல்	திரு டப். ஜீ. சீ. என். வவே கெதர	திரு எஸ். தியபலனகே திரு எஸ். டப். நவரத்ன
13	இரத்தினக் கல் தோற்றுவாய் வரை படம் தொடர்பாக ஜீ பீ எஸ் ஐ அடிப்படையாகக் கொண்ட மாதிரிகளை விருத்தி செய்தல்	திருமதி எம். கே. சீ. ஜயமாலி	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க திரு டப். எம். எம். பீ. ஈ. பண்டார திரு ஜகத் குணதிலக திருமதி டப். ஆர். லக்ஷாந்தி
14	தரமுயர்ந்த தன்மை மற்றும் போட்டித் தன்மையை அதிகரித்தல் : இலங்கையின் இரத்தினக் கல் தொழிற் துறையில் பட்டு வெப்ப மெருகூட்டல் செயன் முறையை விருத்தி செய்தல்	திரு சந்துன் இலங்கசிங்க	திரு சீ. பீ. உடவத்த திரு சுனில் அபேவீர திரு எல். ஆர். கே. பெரேரா திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க திரு எஸ். தியபலனகே
15	இலங்கையில் இரத்தினக் கல் கைத்தொழிலில் இளம் கெவுட நீல இரத்தினக் கல் வெப்ப மெருகூட்டல் செயன் முறை	திரு சந்துன் இலங்கசிங்க	திரு ஆர். எம். என். பீ. கே. ஜயசிங்க
16	இரத்தினக் கற்கல் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வெட்டு இனங்களின் அலங்காரிப்புக் காரணிகளை மாற்றத்துக்கு உள்ளாக்குதல்	செல்வி கே. ஜீ. எஸ். எஸ். டப். பண்டார	திரு யூ. கே. ஐ. தயாரத்ன திருமதி கே. எம். ஆர். எஸ். கோனார திரு யூ. ரவ்சான்

அன்று அந் நிகழ்ச்சியில் பங்கேற்ற கைத்தொழிலாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இப் புத்தாக்க உற்பத்திகள் தொடர்பாக அறிவூட்டப்பட்டது. இதன் போது இப் புத்தாக்க உற்பத்திகளை கைத்தொழில் ரீதியான புதிய உற்பத்திகளாக கைத்தொழிலுக்கு அறிமுகப்படுத்துதல் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. அதன் பிரகாரம், தங்காபரண உற்பத்தியாளர்களின் சங்கத்தின் அழைப்பின் பேரில் Mitigating Mercury Risks: Introducing Eco-Friendly Gold Extraction Alternatives for Sri Lanka's Small Scale Jewelry Sector தொடர்பாக கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்துதல் தொடர்பாக நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. அவ்வாறே, தற்சமயம் தேசிய புத்தாக்க முகவராண்மை நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனையுடன் கூட்டிணைந்த வண்ணம் எமது நிறுவன சார்பாக புலமைச் சொத்து கொள்கையும், புத்தாக்க வணிகமயமாக்கல் தொடர்பாக நிறுவன ரீதியான வர்த்தக ஒருங்கிணைப்பு அலகொன்றையும் நிலை நாட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவு

7.0 நிர்வாக மற்றும் மானிட வளங்கள் பிரிவு

7.1 2023.12.31 ஆம் திகதியிலிருந்த படியான பணிக் குழுத் தகவல்கள்

பதவி / வகுப்பு		அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	தற்சமயம் பணியாற்றுகின்ற எண்ணிக்கை	பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	HM 2-1	1	0	1
பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)	HM 1-1	1	1	0
பணிப்பாளர் (ஆராய்ச்சி)	HM 1-1	1	0	1
முதுநிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஆராய்ச்சி)	AR-2	1	1	0
முதுநிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (வர்ண அதிகரிப்பு)	AR-2	1	0	1
முதுநிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (புத்தாக்கம்)	AR-2	1	0	1
உதவிப் பணிப்பாளர் (நிர் மற்றும் மானிட வளங்கள்)	MM 1-1	1	0	1
உதவிப் பணிப்பாளர் (நிதி)	MM 1-1	1	1	0
உதவிப் பணிப்பாளர் (நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விடயப் பரப்பு விருத்தி)	MM 1-1	1	1	0
உதவிப் பணிப்பாளர் (இரத்தினவியல்)	MM 1-1	1	0	1
உதவிப் பணிப்பாளர் (தங்காபரணம்)	MM 1-1	1	1	0
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	AR-1	15	5	10
போதனாசிரியர்	AR-1	4	0	4
நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் (ஒருங்கிணைப்பு மற்றும் விருத்தி)	JM-1-1	1	1	0
நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் (பரீட்சை மற்றும் தொகை மதிப்பு)	JM-1-1	1	1	0
உள்ளகக் கணக்காய்வு	JM-1-1	1	1	0
முதுநிலை பயிற்சி உத்தியோகத்தர்	JM-1-1	6	0	6
வரை படக் கலைஞர்	MA-2-2	2	0	2
ஜீ ஐ எஸ் உதவியாளர்	MA-2-2	1	1	0
தொகுதி உதவியாளர்	MA-2-2	1	1	0
ஆராய்ச்சி உதவியாளர்	MA-2-2	11	0	11
தொழில்நுட்ப உதவியாளர்	MA-2-2	10	1	9
பயிற்சி உத்தியோகத்தர்	MA-2-2	23	14	9
கணக்காய்வு உதவியாளர்	MA-1-2	1	1	0
முகாமைத்துவ உதவியாளர்	MA-1-2	22	15	7
நிலத் துளையிடுகை இயந்திர இயக்குநர்	PL-3	2	0	2
சாரதி	PL-3	6	6	0
நிலத் துளையிடுகை இயந்திர இயக்குனர் உதவியாளர்	PL-2	2	0	2
திடல் மற்றும் ஆய்வு கூட உதவியாளர்	PL-1	16	12	4
		136	64	72

7.2 வெளி வாரிப் பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பாக ஊழியர்களது பங்களிப்பு - 2023 (உள் நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சி)

#	பயிற்சி நிலையம்	பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பங்கேற்பாளர்கள்
01	திறன் விருத்தி நிதியம் (SDFL)	விற்பனை உபாய வழி அபிவிருத்தி பணிப் பட்டறை	முதுநிலை மற்றும் தொழில்நுட்ப பணிக் குழுவுக்கு
02	திறன் விருத்தி நிதியம் (SDFL)	லீவு லிகிதர்களது செயற் பணி மற்றும் பொறுப்பு தொடர்பான பணிப் பட்டறை	திருமதி கல்பனீ பெரேரா
03	திறன் விருத்தி நிதியம் (SDFL)	மிகச் சிறந்த தொழில் வாழ்வாதார தொழிற் துறை சார் சுகாதார பாதுகாப்பு தொடர்பான இரண்டு நாள் பணிப் பட்டறை	தொழில்நுட்ப பணிக் குழுவுக்கு
04	திறன் விருத்தி நிதியம் (SDFL)	எக்செல் வகுதி (Excel) தொடர்பான பயிற்சிப் பட்டறை	நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் பணிக் குழுவுக்கு
05	திறன் விருத்தி நிதியம் (SDFL)	நிறுவனத்தின் அலுவலகப் பணி உதவியாளர்கள் தொடர்பாக கோட்பாட்டு மற்றும் தொழிற் சார் அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டான இரண்டு நாள் பணிப் பட்டறை	நிறுவனத்தின் அலுவலகப் பணி உதவியாளர் பணிக் குழுவுக்கு
06	திறன் விருத்தி நிதியம் (SDFL)	ஒழுக்காற்று மற்றும் அலுவலக நடைமுறைகள் தொடர்பான இரண்டு நாள் பயிற்சி பணிப் பட்டறை	நிறுவனத்தின் சாரதி பணிக் குழுவுக்கு

7.3 மானிட வளங்கள் தட்டுப்பாடு காரணமாக நிறுவனம் முகங் கொடுத்துள்ள பிரச்சினைகள்

1. நிறுவனத்துக்கென அனுமதிக்கப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கை திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிலையான ஊழியர்களின் எண்ணிக்கை 136 ஆகக் காணப்பட்டாலும், தற்சமயம் பணிக் குழுவில் 64 அங்கத்தவர்கள் மாத்திரமே பணியாற்றிய வண்ணமுள்ளனர். முழு மொத்த ஊழியர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 72 ஆகக் காணப்படுகின்றது. அதனில் நிறைவேற்றுப் பதவிகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான பதவிகள் தொடர்பாக 84 இடப் பெறுமானம் காணப்பட்டாலும், அவற்றுள் 28 இடப் பெறுமானம் மாத்திரமே பணிகளில் ஈடுபட்ட வண்ணமிருப்பதுடன், எஞ்சிய பதவிகள் தொழில்நுட்ப ரீதியான பதவிகளாகவே காணப்படுகின்றன.
2. எனினும், கைத்தொழிலானது இன்றளவில் தொழில்நுட்ப, கைவினை, கல்வி ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பெருமளவில் மாற்றத்துக்கு உள்ளாகியிருப்பதன் வாயிலாக உயர் கல்வி அறிவுள்ள கல்வி சார் பணிக் குழு காணப்படுதல் அத்தியாவசியமான விடயமாகக் காணப்படுகின்றது. இக் கல்வி சார் பணிக் குழு, உயர் தொழில்நுட்ப உட் செலுத்துகையுள்ள பயிற்சிப் பாட நெறிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகளின் விருத்தி மற்றும் அது தொடர்பாக ஏனைய கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு போன்ற பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதுடன், ஆராய்ச்சிப் பிரிவில் இரத்தினக் கல் நிதியங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள், புதிய அலங்கார உறுவமைப்புகள், நவீன தொழில்நுட்ப அறிமுகம் மற்றும் கைத்தொழில் சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப பணிக் குழு மிக குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன.
3. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக வெற்றிடமடைந்துள்ள பதவிகள் தொடர்பாக ஆட் சேர்ப்பு செய்ய முடியாத நிலை காணப்படுவதன் காரணமாக நிறுவனத்தின் எதிர்ப்பார் பலன்களை எய்த முடியாத திறன் குறைவடைந்துள்ளது. எனினும், இப் பதவிகளை நிரப்பும் பொருட்டு தேவையான பணிக் குழுவை இணைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

DEBT
Savings

நிதி பிரிவு

69.928
63.772
44.870
31.012
20.556
26.417
11.311
12.002

8.0 நிதிப் பிரிவு

8.1 கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கடந்த 05 வருட காலப் பகுதி தொடர்பான நிதித் தகவல்கள்

(ரூபா.000)

	2019	2020	2021	2022	2023
முன்னெடுப்பு வருமானங்கள்					
திறைசேரி கையளிப்பு மீண்டு வரும்	85,000.00	77,973.00	77,060.00	86,996.00	89,119.00
பிற பங்களிப்புகள்	35,622.80	29,536.91	22,528.16	19,430.60	27,749.08
பாட நெறிக் கட்டணங்கள்	12,212.03	12,409.64	3,542.50	15,529.05	30,820.87
சேவைக் கட்டண வருமானம் புவிச் சரிதவியல் ஆராய்ச்சி சேவைகளின் மூலமான பெறுகைகள்	308.0	72.5	12.00	246.00	216.00
மொத்த முன்னெடுப்பு வருமானம்	**133,142.83**	**119,992.05**	**103,142.66**	**122,201.65**	**147,904.95**
பிற வருமானங்கள்	1,690.02	1,042.83	837.49	1,742.04	3,840.62
வட்டி வருமானம்	553.42	457.21	293.71	466.03	632.09
பிற பெறுகைகள்	60.48	4680.0	1564.0		
மொத்த வருமானம்	**135,446.75**	**126,172.10**	**105,837.39**	**124,409.73**	**152,377.66**
கழிக்கப்பட்டது - செலவுகள்					
ஏ ஊழியர் மற்றும் நிர்வாக செலவுகள்	98,994.18	91,624.36	84,691.33	99,431.65	106,582.99
பீ தேய்மானம் மற்றும் பொதுச் செலவுகள்	41,564.02	28,208.10	33,251.66	30,297.86	39,997.83
மொத்த செலவுகள்	**140,558.20**	**119,832.46**	**117,943.00**	**129,729.51**	**146,580.82**
மேலதிகம் (குறைப்பாடு)	**(5,111.45)**	**6,339.64**	**(12,105.1)**	**(5,319.78)**	**5,796.84**

8.2

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவுக் கூற்று

விபரம்	2023		2022	
	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000
முன்னெடுப்பு வருமானம்				
மீண்டு வரும் கையளிப்பு - திறைசேரி		89,119.00		86,996.00
பிற வருமானங்கள்				
பாட நெறிக் கட்டணங்கள்		30,820.87		15,529.05
கெவுட வெப்ப மெருகூட்டல் கட்டணம்		216.0		246.0
வட்டி வருமானம்		632.09		466.03
பல்வேறு வருமானங்கள்		3840.62		1,742.04
13 வருட தொடர் கல்வி நிகழ்ச்சி				
முன்னெடுப்பு வருமான மொத்தம்		**124,628.58**		**104,979.13**
குறைக்கப்பட்டது : முன்னெடுப்பு செலவுகள்				
பணிக் குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்		56,341.84		57,278.25
பயணச் செலவு		127.19		72.60
வழங்குகை மற்றும் நுகர்வுப் பொருட்கள்		4751.28		5,016.90
பராமரிப்புச் செலவு		5641.31		4,568.33
ஒப்பந்தச் சேவைகள்		32452.49		28,282.47
பயிற்சிச் செலவு		4745.96		3,413.72
பிற முன்னெடுப்புச் செலவுகள்		2482.42		774.80
முன்னெடுப்புச் செலவுகளின் கூட்டுத் தொகை		**106,542.49**		**99,407.07**
முன்னெடுப்புகளின் மூலம் பெறப்பட்ட மேலதிகம் / (குறைப்பாடு)		**18,086.09**		**5,572.06**
குறைக்கப்பட்டது - நிதிச் செலவு		(40.50)		(24.57)
மூலதனச் செலவு தொடர்பான நிதியங்கள்	15,201.14		16,876.10	
பிற பெறுகைகள்				
	15,201.14		16,876.10	
குறைக்கப்பட்டது - தேய்மான நீக்கல் செலவுகள்	(27,449.88)	(12,248.74)	(27,743.37)	(10,867.27)
பிற மூலதன முதலீட்டு நிதியங்கள்	(12,547.94)		(2,554.50)	
குறைக்கப்பட்டது - மூலதன முதலீட்டு நிதியங்கள்	(12,547.94)		(2,554.50)	
மூலதனச் சொத்துக்களை அதிகரித்தல்				
பிற மூலதன முதலீடுகளின் நிகர செலவு		5,796.84		(5,319.78)
முன்னெடுப்புகளற்ற வருமானம்				
ஒன்று சேர் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட வருமானம்				
அதி விசேட வகுதிகளுக்கு முன்		5,796.84		(5,319.78)
மேலதிகம் / (குறைப்பாடு)				
காலப் பகுதிக்கான /நிகர மேலதிகம் / குறைப்பாடு		5,796.84		(5,319.78)
ஒன்று சேர்க்கப்பட்டது				
முன்னைய ஆண்டுக்கான நிகர மேலதிகம் / (குறைப்பாடு)	(47,558.85)		(39,308.94)	
கழிக்கப்பட்டது - முன்னைய வருடத்தின் ஒப்பீடுகள்		(1,979.82)		(2,930.13)
நிகர மேலதிகம் / (குறைப்பாடு)		**(43,741.82)**		**(47,558.85)**

8.3

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான மீதி ஆவணம்

	2023		2022	
விபரம்	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000
நடைமுறையற்ற சொத்துக்கள்				
சொத்து இயந்திரங்கள் உபகரணங்கள்	99,630.0		101,259	
பணி நன்கொடை நிதியம்	3,407.0	103,037.0	955	102,214
நிலையான வைப்புக் கணக்கு		4846		4304
நடைமுறைச் சொத்துக்கள்				
கையிருப்புகள் மற்றும் நுகர்வுப் பண்டங்கள்	7355		4798	
விற்பனைக்கென காணப்படுகின்ற புத்தகங்கள்				
கடன் மற்றும் முற் பணம்	5538		3362	
வைப்புகள்	1334		630	
வர்த்தக மற்றூம் ஏனைய கிடைக்க வேண்டிய கணக்குகள்	8718		7483	
ஏழ்மையைப் போக்கும் கருத்திட்டம்			1559	
முன் செலுத்துகைகள்	169		202	
பணம் மற்றும் வங்கி	20,044	43,158	9114	27,148
சொத்துக்களின் மொத்தம்		151,041		133,666
பொறுப்புகள்				
நடைமுறைப் பொறுப்புகள்				
செலுத்த வேண்டிய கணக்குகள்	5712		604	
திரட்டு செலவுகள்	3386	9099	4336	4,940
நடைமுறையற்ற சொத்துக்கள்				
மினிமாட்டா கருத்திட்டம்	780		179	
பணி நன் கொடை தொடர்பான ஒதுக்கீடு	14941		13350	
தேசிய விஞ்ஞான மன்றம்		15721		13,529
பொறுப்புகளது கூட்டுத் தொகை		24820		18,469
நிகர சொத்துக்களின் கூட்டுத் தொகை		**126,221**		**115,197**
நிகர சொத்துக்கள் / பெருந் திரழ்கள்				
பங்கேற்பு மூலதனம்	50,000		50,000	
உள்ளடக்கம் - இரத்தினக் கல்	44,646		43,772	
பிற பங்களிப்புகள்	850		850	
ஊழியர் மறைமுக நிதியம்	2,109		1,857	
மாறுபடக் கூடிய வருமானம் - மூலதன நிதியங்கள்	72,358		66,276	
முழு மொத்த நிதியம்	(43,742)		(47,558)	
நிகர சொத்துக்களின் மொத்தம்		**126,221**		**115,197**

....
உதவிப் பணிப்பாளர் (நிதி)

21-05-2024
திகதி :

....
தலைவர்

திகதி : 21-05-2024

....
பணிப்பாளர் சபை அங்கத்தவர்

திகதி : 21-05-2024

8.4

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான நிதியோட்டக் கூற்று

(ரூபா.000)

விபரம்	**2023**	**2022**
முன்னெடுப்பு செயற்பாடுகளின் ஊடான நிதியோட்டம்		
முன்னெடுப்புச் செயற்பாடுகளின் ஊடாக பெறப்பட்ட மேலதிகம் / குறைப்பாடு	5,796.84	(5,319.78)
பணமற்ற கொடுக்கல் வாங்கல்கள்		
தேய்மான ஒதுக்கீடு	27,449.88	27,743.37
வட்டி	(632.09)	(466.03)
தழும்பல் நிலை மூலதன வருமான ஒப்பீடு	(27,749.08)	(19,430.61)
ஏனைய நடைமுறை பொறுப்புகளின் அதிகரிப்பு / குறைவு	4,158.93	(2,126.89)
சொத்துக்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான வருமானம்		(13.66)
காலங் கடந்த வாடகை	473.48	473.48
பணி நன்கொடை ஒதுக்கீடு	1,692.39	2,939.77
நிலையான சொத்து ஒப்பீடு		(8.82)
பணி நன்கொடை செலுத்துகை	(102.15)	(3,761.43)
ஏனைய நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு	(7,074.80)	(1,331.63)
முன்னெடுப்புச் செயற்பாடுகளின் ஊடான நிகர பணவோட்டம் (அ)	**4,013.4**	**(1,302.23)**
முதலீட்டுச் செயற்பாடுகளின் ஊடான நிதியோட்டம்		
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(6,225.52)	(89.65)
பணி நன் கொடை நிதியத்தின் அதிகரிப்பு	(2,451.62)	1,316.79
வட்டி வருமானம்	883.29	602.45
நிலையான வைப்புகளின் அதிகரிப்பு	(542.37)	(324.42)
சொத்துக்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம்		13.66
இடர்க் கடன் செலுத்துகை		(2,743.05)
இடர்க் கடன் பெறுகை		1,238.72
முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான நிகர நிதியோட்டம் (ஆ)	**(8,336.22)**	**14.51**
நிதிச் செயற்பாடுகளின் மூலமான நிதியோட்டம்		
மூலதனக் கையளிப்பு	14,651.0	2,000.0
மினிமாட்டா கருத்திட்டம்	601.25	(391.82)
தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியங்கள்		
நிதிச் செயற்பாடுகளின் ஊடாக பெறப்பட்ட நிகர நிதியோட்டம் (இ)	**15,252.25**	**1,608.18**
பணம் மற்றும் நிதி வகுதிகளின் நிகர அதிகரிப்பு / குறைவு (அ) (ஆ) (இ)	10,929.43	320.46
ஆரம்ப பணத் தொகை / நிதி மீதி	9,113.68	8,793.22
வருட இறுதியின் இருந்த படியான பணம் / நிதி மீதி	**20,043.11**	**9,113.68**

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல.: IMT/G/GJRTI/FA/2023 திகதி: 2024 ஜுன் 11 ஆம் திகதி

தலைவர்

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறையாக்கல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகைமைபெற்ற அபிப்பிராயம்

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி நிலைமைகள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புகள், சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் தகைமைபெற்ற அபிப்பிராயத்துக்கான அடிப்படைப் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழுகின்ற தாக்கம் தவிர, அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையானதும் நியாயமானதுமானதொரு நிலைமையை எடுத்துக்காட்டுகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 தகைமைபெற்ற அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள் 07 இன் 92 ஆம் பிரிவின் பிரகாரம், முழுமையாக தேய்மானமளிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னமுமே பயன்பாட்டில் உள்ள செலவினம் 60,794,015 ஆன சொத்துக்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் தாங்கு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை

(ஆ) தேசிய மாணிக்கம் மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்தப்படும் 03 பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்கின்ற கருத்திட்டத்துக்காக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் வழங்கப்பட்ட ரூபா 10,564,786.00 தொகையை வருமானமாகவும் உறப்பட்ட ரூபா 5,534,456.00 தொகையை செலவாகவும் அடையாளம்காணாமல், ரூபா 5,030,330.00 தொகை வியாபார மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளினுள் வங்கிக்கு நேரடியாகப் பெறப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 341,685.00 ஆன வைப்புகளை அடையாளம்கண்டு கணக்கில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதுளை பயிற்சி நிலையக் கட்டிடத்தை வாடகைக்கு பெறுகின்றபோது வழங்கப்பட்ட ரூபா 600,000.00 வைப்புத் தொகையில் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்குரிய வாடகைச் செலவு ரூபா 150,000.00 கழிக்கப்பட்டு செலவு என்றவாறு கணக்கில் இடப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்வு கணிப்பீடுகளின்படி மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் இறுதியாகின்றபோது ரூபா 3,908,650 பெறுமதியான மென்பொருள் மற்றும் மென்பொருள் அபிவிருத்திச் சொத்துக்கள் முழுமையாக தேய்மானமளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் திரண்ட தேய்மானத் தொகை ரூபா 3,554,560.00 ஆக உள்ளதன் காரணமாக தேய்மான ஒதுக்கீடு ரூபா 364,090.00 குறைவாக கணக்கில் இடப்பட்டிருந்தது.

(ஊ) இரத்தினபுரி நிறுவன வளவில் காணப்படுகின்ற மின் உற்பத்தி இயந்திரத்தின் சீர்காப்புச் சேவை உடன்படிக்கைக்காக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 148,680.00 தொகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைய நான் கணக்காய்வை மேற்கொண்டேன். மேற்படி கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரமாகக் காட்டப்பட்டுள்ளது. எனது தகைமைபெற்ற அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதை முன்னிட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொறுத்தமானதுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிறுவனத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்ட நிறுவனத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காதுள்ள தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றன. மேற்படி ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்குவதில்லை என்பதோடு நான் அது தொடர்பில் எவ்வித அத்தாட்சிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயம் தெரிவித்தலையோ மேற்கொள்ளமாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வுக்கு ஏற்புடையதாக எனது பொறுப்பாக உள்ளது, மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களோடு அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு விதத்தில் பெறப்பட்ட எனது அறிவின்படி குறிப்பிடத்தக்களவில் இணங்குவதில்லையா என்பதை ஆராய்தலாகும்.

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெறப்பட்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அடிப்படையில், மேற்படி ஏனைய தகவல்கள் குறிப்பிடத்தக்களவு பிழைகள் இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த விடயத்தை நான் அறிக்கையிடுதல் அவசியமாகும். இது தொடர்பில் என்னால் அறிக்கையிடப்படுவதற்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் நிர்வாகத் தரப்பினரினதும் பொறுப்புகள்

மேற்படி நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரித்தல் மற்றும் நியாயமான விதத்தில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு போலிக் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றபோது நிறுவனத்தை தொடர்ந்து பேணிவரக்கூடிய ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவம் நிறுவனத்தை ஒழிப்புச் செய்வதற்குத் தீர்மானிப்பதாயிருப்பின் அல்லது வேறு மாற்று வழிமுறைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயிருந்தாலன்றி, தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்புக்கு ஏற்புடையவாறான விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பில் மேற்பார்வை செய்கின்ற பொறுப்பு நிர்வாகத் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவுக்கமைய நிறுவனத்தின் வருடாந்த மற்றும் தவணை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க இயலுமான வகையில்

தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான விதத்தில் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிவரப்படுதல் வேண்டும்.

1.5. நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு போலிக் கூற்றுக்களில்லை என்பதைப் பற்றிய நியாயமானதொரு உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குதல் எனது குறிக்கோளாகும். நியாயமானதொரு சான்றுப்படுத்தல் உயர் மட்டத்திலானதொரு சான்றுப்படுத்தலாகும் என்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின்படி கணக்காய்வை மேற்கொள்கின்றபோது அது எப்போதுமே குறிப்பிடத்தக்களவு தப்பான கூற்றுக்களை வெளிப்படுத்துகின்ற ஒரு உறுதிப்படுத்தலாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாக அல்லது கூட்டாக தாக்கத்தை ஏற்படுத்துமென்பதால் குறிப்பிடத்தக்களவு தப்பான கூற்றுக்கள் ஏற்படலாமென்பதோடு, அதன் குறிப்பிடத்தக்க அளவானது மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசோதிப்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்களில் ஏற்படுகின்ற தாக்கத்தில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக நான் கணக்காய்வின்போது தொழில்வாண்மைத் தீர்ப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்தேகங்களுடன் கூடிய விதத்தில் செயற்பட்டுள்ளேன். மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையைப் பெறுகின்றபோது மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க அளவிலான பிழையான கூற்றுக்களின் இடரை இனங்காணல் மற்றும் மதிப்பிடும் பொருட்டு சந்தர்ப்பத்திற்கேற்ப தகுந்த கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் மூலம் ஏற்படுகின்ற தாக்கத்தை விட மோசடியின் மூலம் ஏற்படுகின்ற தாக்கம் அதிகமாக இருப்பது, அவை கூடாத கூட்டிணைவுகள், போலி ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டு தவிர்ந்திருத்தல், பிழையாக் காட்டப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளிலிருந்து தவிர்ந்திருத்தல் ஆகிய காரணங்களினாலாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதியான தன்மை தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிப்பதற்குக் கருதாத போதிலும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தகுந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிர்வாகம் தொடர்பாக அறிந்துகொண்டேன்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருந்தும் தன்மை கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டன.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பில் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கான அலுவலகத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையை பயன்படுத்துவதன் ஏற்புடைத்தன்மை தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மை உள்ளதென நான் தீர்மானிப்பதாயிருப்பின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது

கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதியதாயில்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் படி தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் உள்ளமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தகுந்த மற்றும் நியாயமான விதத்தில் உள்ளடங்கியுள்ளதென்பதும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் முழுமொத்த சமர்ப்பணமும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதானமான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத் தரப்பினர்கள் அறிவுறுத்தப்படுவார்கள்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறையாக்கல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் தகைமைபெற்ற அபிப்பிராயத்துக்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் தாக்கத்தைத் தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு, எனது பரிசோதனையின் மூலம் காணக்கூடியதாக உள்ளவாறு ஒழுங்கான நிதி அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணிவரப்பட்டுள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுக்கு நேரொத்ததாக உள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 கடைப்பிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் படி மற்றும் குறிப்பிடத்தக்க அளவிலான விடயங்களின் வரையறைகளினுள், பின்வரும் கூற்றை வெளியிடும் அளவுக்கு எதுவும் என்னால் அவதானிக்கப்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, சபையின் நிர்வாகச் சபையின் அங்கத்தவர்கள் ஏதேனும் அலுவல்கள் தொடர்பிலான ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு விதத்தில் பொதுவான வியாபார நிலைமைகள் தவிர்ந்த தொடர்புகள் உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, ஏதேனும் ஏற்புடையதான எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதென்பது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி நிறுவனத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் காரியங்களுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளதென்பது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறன்மிக்க விதத்தில் மற்றும் பயனுறுதியான விதத்தில் காலகட்டத்தினுள் குறித்த சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது.

3. ஏனைய விடயங்கள்

(அ) மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பள மீதியினுள் உள்ளடங்கியுள்ள 04 உத்தியோகத்தர்களிடமிருந்து தவணை அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 466,762.00 தொகை 07 ஆண்டுகளாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) எதிர்கால ஊழியர் விலகலின்போது செலுத்தப்பட வேண்டிய மிகைஊதியத் தொகை, அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்துடன் அதிக நலன்கள் கிடைக்கக்கூடிய ஒரு மூலத்தில் முதலீடு செய்ய வேண்டிய போதிலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்காது ரூபா 3,304,898.00 சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

(இ) இலங்கையில் காணப்படுகின்ற மாணிக்க சாத்தியத்தன்மை கொண்ட இடங்கள் பற்றிய தகவல்களை ஆய்வு செய்து அத்தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தளமொன்றை உருவாக்குதல் மற்றும் அத்தகவல்களைத் தழுவியதாக சுரங்க அகழ்வு நடவடிக்கைகளுக்காக காணி உரிமையாளர்களை ஆற்றுப்படுத்தும் அடிப்படை நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட "இலங்கையில் மாணிக்கப் படிமங்களின் ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக் கருத்திட்டத்திற்காக" 2009 தொடக்கம் 2023 வரை ரூபா 30,589,687.00 செலவு செய்து ஆராய்ச்சிகள் நடத்தி ஆராய்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டிருந்த போதிலும் இக்கருத்திட்ட மேல் நடவடிக்கைகள் தொடர்பில் மாணிக்க மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் முறைசார்ந்ததொரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு தவறியுள்ளமையின் காரணமாக ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியாமலுள்ளது.

(ஈ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாள் தொகுதியான 136 இல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அப்போதைய ஆளணியினர் எண்ணிக்கை 64 ஆக காணப்பட்டது. அதன்படி ஆளணியினரில் 72, அதாவது அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியினர் எண்ணிக்கையில் 52 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டது. அந்த வெற்றிடங்களில் உள்ளடங்கியுள்ள விரிவுரையாளர் பதவிகள் 04, சிரேஷ்ட பயிற்றுவிப்பு உத்தியோகத்தர் பதவிகள் 06 மற்றும் பயிற்றுவிப்பு உத்தியோகத்தர் பதவிகள் 09 வெற்றிடமாகக் காணப்படுகின்றமை

இந்நிறுவனத்தை ஆராய்ச்சி மற்றும் பயிற்சியளிப்பு நிலையமாக இயங்கச் செய்வதற்கு மனிதவளப் பிரச்சினை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பது அவதானிக்கப்பட்டது.

(உ) நிறுவனத்தின் கணக்கு நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட "TALLY" கணக்கீட்டு மென்பொருள் முறைமைக்காக 2017/2018 ஆண்டுகளில் ரூபா 346,035.00 செலவிடப்பட்டுள்ளதோடு மேற்படி கொடுப்பனவு செய்யப்பட்டு 6 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மென்பொருள்களைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 14,204,402.00 செலவிடப்பட்டு 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில் நடைமுறை ஆண்டு வரை குறித்த பணி நடைபெறாமையின் காரணமாக 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் அக்காணி குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(எ) அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பணிகள் 31 இல் 14 பணிகளுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடு ரூபா 20.675 மில்லியனாக காணப்பட்ட போதிலும் உண்மைச் செலவு ரூபா 9,094.00 மில்லியனாக உள்ளதன் காரணமாக மேற்படி 14 பணிகளினதும் நிதியியல் முன்னேற்றம் 44 சதவீதமாக உள்ளது.

கையொப்பம்: டபிள்யு.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி